J.M.C-D


பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 09 செவ்வாய்க்கிழமை (25 09-2001) தொலைபேசி 3378 ஒலி 288



அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## ● அமுக்க வெடியில் ஆட்டோ சிக்கியது

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் உடல் சிதறிப் பலி!

## இருபாலையில் பயங்கர நிகழ்வு

(யாழ். விசேட நிருபர்)

இருபாலை கிழக்கில் ஆட்டோ ஒன்று அமுக்கவெடியில் சிக்கியதில் அதில் பிரயாணம் செய்த ஒரு வயது நிரம்பிய பச்சிளம் பாலகி உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் உடல்சிதறிப் பலியானார்கள்- இச்சம்பவத்தில் ஆட்டோ சாரதி முத்துலிங்கம் சசிகுமார் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த அமுக்கவெடிச் சம்பவத்தை அடுத்து இருபாலை, கோப்பாய் பகுதி எங்கும் ஒரே சோகமயமாகக் காட்சியளித்தது. இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் தீவிர புலன்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இருபாலை கிழக்கு குளுக் கண்டிலேன் பகுதியில் நேற்றுக்காலை 5.50 மணியளவில் நெஞ்சை உருக்கும் இவ் அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் சிக்கிய ஆட்டோ சுமார் 40அடி உயரத்துக்கு மேல் தூக்கிவீசப்பட்டு சுக்கு நூறாக நொருங்கியுள்ளது.

பயணம் செய்த ஆறுபேரும் அதேயளவு தூரத்துக்கு தூக்கி வீசப்பட்டு உடல் சிதறி நிலையில் நால்வர் அதே இடத்தில் துடிதுடித்துப் பலியாகியுள்ளனர்.

ஏனைய இருவரும் வைத்தி

(08ம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்த 6பேரின் விபரம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு குளுக் கண்டி லேன் பகுதியில் ஆட்டோ அமுக்க வெடியில் சிக்கியதில் அதில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மனைவி இ.தெய்வநாயகி (வயது 45), மகள் இ.நிருபா (வயது 15) (மாணவி கோப்பாய் கிறிஸ்தவ க்கல்லூரி), மருமகன் அரியரட்ணம் கமலரட்ணம் (வயது 26) அவரது மனைவி க.பிருந்தா (வயது 20), மகள் க.பிரியவதனி

## முல்லைக் கடலில் உயிரிழந்த புலிகள்

(வவுனியா)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் மூவர் வீரச்சாவடைந்ததாக புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்துள்ளது.

கடற் கரும்புலிகளான,

● மேஜர் நல்லமுத்து அல்லது சிவாகரன் [கார்த்திகேசு செந்தில்குமார் - வவுனியா]

● கப்டன் பொன்மகள்

(08ம்பக்கம் பார்க்க)

## முல்லைக் கடற் பரப்பில் 11 கடற் படையினர் பலி;

## புலிகள் அறிவிப்பு!

(வவுனியா)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் கடற் படையினரின் இரண்டு றோடாப்படகுகள் சேதப்படுத்தப் பட்டுள்ளதுடன் 11 க்கு மேற்பட்ட கடற் படையினர் பலியாகியுள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இத் தாக்குதல் சம்பவத்தின் போது கடற் படையினருக்கு உதவி வழங்க கிபிர் ரக யுத்த விமானங்களும் மற்றும் உலங்குவானூர்திகளும் இத் தாக்குதலில் ஈடுபட்டிருந்தன.

சுமார் ஆறுமணிநேர சமரின் போது புலிகள் தரப்பில் மூவர் உயிரிழந்துள்ளதாகவும் புலிகளின் குரல்வானொலி தெரிவித்துள்ளது. (ம)

### அரசு; ஐ. தே. க; ஜே. வி. பி ஆதரவுடன

# 17 வது திருத்த சட்டமூலம் நேற்று பாராளுமன்றில் நிறைவேறியது!

(நமதுநிருபர்)

சுதந்திர ஆணைக்குழுக்கள் நியமிப்பது தொடர்பாக அரசியல் அமைப்பின் 17 வது திருத்தச்சட்ட மூலம் நேற்று பாராளு மன்றத்தில் 210 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்

ஆகிய கட்சிகள் கலந்து கொள்ளவில்லை.

1994 ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவி

சிக்கியதில் அதில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நேற்று காலைஇடம்பெற்ற நெஞ்சை உலுக்கும் இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமி இராசேந்திரம் (வயது 50) அவரது மருமகன் அரியரட்ணம் கமலரட்ணம் (வயது 26) அவரது மனைவி க.பிருந்தா (வயது 20), மகள் க.பிரியவதனி (வயது 01) ஆகியோரேபரிதாபகரமாக உயிரிழந்தவர்களாவர்.

(இ-10-225-104-208-221)

# ஆறுபேரின் உடல்களும் சிதறிக் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு குளுக்கண்டி ஒழுங்கையில் நேற்று அதிகாலை 5-50 மணியளவில் இடம்பெற்ற அமுக்க வெடியில் சிக்கிய முச்சக்கர வண்டி சம்பவ இடத்தில் இருந்து சுமார் 40 அடி தூரத்தில் தூக்கி வீசப்பட்டிருந்தது

அமுக்கவெடி வெடித்த இடத்தில் சுமார் 5அடி ஆழமும் 5அடி சுற்று வட்டத்தைக் கொண்ட பாரிய குழி ஒன்றைக் காணக் கூடியதாக இருப்பதாக நேரில் சென்று பார்த்த நிருபர் அறிவிக்கிறார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# வீட்டைப் பாதுகாக்க நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு குளுக்கண்டிப் பகுதியில் இடம்பெற்ற அமுக்க வெடி விபத்தில் கொல்லப்பட்டவர்களின் வீட்டிற்கு பாதுகாப்பு வழங்குமாறு யாழ். மாவட்ட நீதிவான் இ. த. விக்கினராஜா அப்பகுதி கிராம சேவையாளருக்கும், கோப்பாய்ப் பொலிசாருக்கும் உத்தரவிட்டுள்ளார்.

நிலக் கண்ணிவெடிச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் வீட்டிற்குப் பூட்டுப் போடும் (8 ஆம் பக்கம் பார்க்க)

(நிருபர்)

சுதந்திர ஆணைக்குழுக்கள் நியமிப்பது தொடர்பாக அரசியல் அமைப்பின் 17 வது திருத்தச்சட்ட மூலம் நேற்று பாராளு மன்றத்தில் 210 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பின் 17 வது திருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவாக அரசாங்கத்துடன் சேர்ந்து ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி. மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன வாக்களித்தன.

அரசியல் அமைப்புச் சட்ட திருத்தமூல வாக்கெடுப்பின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், ரெலோ ஆகிய கட்சிகள் கலந்து கொள்ளவில்லை.

1994ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பதவி ஏற்றபின் அரசியல் திருத்தப் பிரேரணை ஒன்று முதல் முறையாக எதிர்க்கட்சியின் ஆதரவுடன் நிறைவேறியிருப்பது இலங்கையின் அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அரசியல் அமைப்பின்17வது திருத்தச்சட்டமூலத்திற்கு சிறுபான்மை தமிழ்கட்சிகளின் ஆதரவுஇன்றி பெரும்பான்மை சிங்களபேரினவாத

(08ஆம் பக்கம் பார்க்க)

# முன்னாள் அமைச்சர்கள் பின்வரிசையில்

[கொழும்பு]

அரசியல் அமைப்பின் 17 வது திருத்தச்சட்ட மூலம் நேற்று பாராளு மன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது முன்னாள் அமைச்சர்களான ஜி.எல். பீரிஸ், எஸ்.பி. திஸநாயக்கா, மகிந்த விஜயசேகரா ஆகியோர் பாராளு மன்ற பின் வரிசை ஆசனத்தில் அமர்ந்திருக்கக் காணப்பட்டனர். [வ]

# புலிகள் தாக்குதல் கோப்ரல் பலி

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் இராணுவத்தினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 5 மணியளவில் ஓமந்தைப்பகுதியில்இடம்பெற்ற இத் தாக்குதலில் லான்ஸ்கோப்பிரல் ஜெயசிங்கா என்பவரே கொல்லப்பட்டவராவார் (ம)

# ரஷ்ய எல்லைப் பகுதியில் 37 இலங்கையர் கைது

(லண்டன்)

ரஷ்யா - கஸகஸ்தானருகே சட்டவிரோதமாக நுழைய முயன்ற 37 இலங்கையர்களை ரஷ்ய எல்லைப் பாதுகாப்பு படையினர்கைது செய்துள்ளனர்.

கஸகஸ்தானிலிருந்து ஓம்ஸ் என்ற செச்சனிய பகுதிக்கு ஒரு டிரக் வண்டியின் பெட்டிக்குள் ஒளிந்திருந்து சென்ற போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக எல்லைப்பாதுகாப்பு படையினர் தெரிவிக்கின்றனர்.

டிரக்வண்டியைஓட்டிய கஸகஸ்தான் நாட்டுச் சாரதிக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைதான 37 பேரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவுள்ளதாக கஸகஸ்தான் பொலிசார்தெரிவித்துள்ளனர்

இதேவேளை கடந்த ஜனவரி மாதம் இலங்கையைச் சேர்ந்த 56 பேர் கஸகஸ்தானில் பலநாட்களாக அலைந்து திரிந்து குளிரில் உறைந்து போன நிலையில் மீட்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


### தேவை

தரமான கோட், சூட், என்பன நியாய விலைக்கு ,எடுக்சப்படும். தொடர்பு: M.G.M; 163, மின்சார நிலைய வீதி, பஸ்நிலையம் முன்பாக யாழ்ப்பாணம்; [3581]


## கொழும்புத்துறையில் திருடர் தொல்லை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியில் நாளுக்குநாள் திருடர்களின் தொல்லைஅதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்;

மக்கள் மீளக்குடியமராத வீடுகளிலுள்ளஓடுகள், கதவுகள், நிலைகள் பெறுமதியான மரங்கள்போன்றவற்றைஅவர்கள் அபகரித்துச் செல்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

(செ-223)

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய கலாசாலைகளின் 2ம் ஆண்டு ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் இவ்வருடம் டிசம்பரில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் கோப்பாய், மற்றும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அறிவித்துள்ளது.

இப்பரீட்சைகள் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்தப்படுவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ- 106)

## தேசிய மட்ட விளையாட்டில் வீரர்கள் ஐவர் பதக்கம் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 11 ஆம் திகதி குருநாகலில் இடம்பெற்ற தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளச் சென்ற குத்துச் சண்டை, கூடைப்பந்தாட்ட, உதைபந்தாட்டவீரர்களில் ஐவர் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்;

### குத்துச் சண்டை

பி. பரமகுமார் (வெள்ளிப் பதக்கம்) பி. எஸ். ஏ. ஞானதீபன் (வெள்ளிப்பதக்கம்)

### உதைபந்தாட்டம்

எஸ். சபானந் (வெண்கலப் பதக்கம்) ஏ. ரொட்னி மாசல் (வெண்கலப் பதக்கம்)

### கூடைப்பந்தாட்டம்

ரி. சாந்தகுமார் (வெள்ளிப் பதக்கம்) (உ-10)

## பருத்தித்துறை மத்திய மருந்தக அமைப்புக்கு பொருத்தமான காணி தெரிவு

(புலோலி)

பருத்தித்துறை நகர சபைக்குச் சொந்தமான பருத்தித்துறை தும்பளை வீதியில் உள்ள தெங்கன் கிணற்றடிக் காணியே பருத்தித்துறை மத்திய மருந்தகம் அமைப்பதற்கு உகந்த காணியாகும்;

ஆகவே இக் காணியில் மருநதகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலருக்கு யாழ். அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறை மத்திய மருந்தகத்தை அமைப்பதற்கு ஏற்கனவே பருத்தித்துறை பிரதேச செயலரால் தெரிவு செய்யப்பட்ட ஆத்தியடி பிள்ளையார் ஆலய காணி பொருத்தமற்றதெனவும் பொருத்தமான காணியைத் தெரிவு செய்து மருந்தகத்தை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் பருத்தித்துறையைச் சேர்ந்த 65 பிரமுகர்கள் கைச்சாத்திட்டு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுச் செயலாளர், யாழ். அரச அதிபர் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஆகியோரைக் கேட்டிருந்தனர்;

இதனையடுத்து யாழ் அரச அதிபரின் பணிப்பின் பேரில் யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் பருத்தித்துறைக்குச் சென்ற அதிகாரிகள் குழு பருத்தித்துறை நகர சபைக்குச் சொந்தமான தெங்கன் கிணற்றடி காணி, பருத்தித்துறை நகர சபை தொழிலாளர் குடியிருப்பு காணி, தற்காலிக மருந்தகத்திற்கு அண்மையில் உள்ள ஆத்தியடி பிள்ளையார் ஆலய காணிகளைப் பாவையிட்டதுடன் மேற்படி காணியில் அமைப்பதற்கான சிபார்சையும்வழங்கியுள்ளது. (உ-52)

## அறிமுகக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலையில் நேற்று முதலாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கு சாரணியம் பற்றிய அறிமுகக் கூட்டமும் கலந்துரையாடலும் இடம் பெற்றது;

சாரணர், குருளைச் சாரணர் தலைவர்களுக்கான இப் பயிற்சியினை கிளிநொச்சி, தென்மராட்சி, பயிற்சிக் குழுவினர் வழங்கினர்.

கௌரவ மாவட்ட ஆணையாளர் எம். புவனேநதிரன் தலைமையில் திருமதி ஆர். ஜே. பி. சேவியர், எம். ரவீந்திரன், வி. கருணாகரன். திருமதி வி. வீரமணி ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்;

(உ,106)

## நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் பரிபாலன சபை புதிய நிர்வாகசபைத் தெரிவு கடந்த 22 ஆம் திகதி நடைபெற்றது.

தலைவராக க. தர்மலிங்கம், உப தலைவராக க. ஸ்ரீஸ்கந்தராசா, செயலாளராக ஐ சிவலோகநாதன், உப செயலாளராக செ. செல்வரத்தினம், பொருளாளராக ச. குணசிங்கம் மற்றும்,

நிர்வாக சபை உறுப்பினர்களாக மேலும் 10 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

(உ-106)

## மத்தியஸ்தர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வலைப்பந்தாட்டமத்தியஸ்தர் பரீட்சை ஒன்றினை இலங்கை வலைப்பந்தாட்ட சங்கம் யாழ்.ப்பாணத்தில்நடத்தவுள்ளது;

இதற்கான விண்ணப்பப்படிவங்களையாழ் பல்கலைக்கழக உடற்கல்வி அணியைச்சேர்ந்த செல்வி அ.ராதையிடம் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும், மேலதிக விபரங்களுக்கு யாழ் மாவட்டவிளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ் ஜேரூபசிங்கத்துடன் தொடர்பு தொள்ளுமாறும்இதற்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் தினம் இம் மாதம்27ஆம்திகதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## வவுனியா...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சமாச்சாரம் வெளிப்பட்டது

பிரஸ்தாப பெண்ணின் முறைப்பாட்டை அடுத்து தரகு வேலை பார்த்த மேலும் இருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

(ந-4)

## பாலர் பாடசாலை

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

செ. செல்வரத்தினத்தால் திறந்து வைக்கப்பட்டன.

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு தமிழ் அமைச்சினால் ஒதுக்கப்பட்ட ஒரு இலட்சம், ரூபாவிலிருந்து இவை புனரமைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது;

(உ-106)

## ஜீரணம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கோஸ் கிடைக்கிறது; குளுக் கோஸ்கிடைக்கப்பெற்ற மாத்திரத்தில் பசி அடங்குகிறது: இதுவே, Bio Feed Back Mechanism:

தொடரும்;

## விபத்தில் ஆசிரியர் காயம்

(காரைநகர்)

காரைநகர் விளானைப் பகுதியில் நேற்று மாலை மோட்டார்சைக்கிள் ஒன்று விபத்திற்குள்ளானதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த ஆசிரியரான விஜயரட்ணம் பிறேம்குமார் என்பவர் காயமடைந்துள்ளார்.

(ந-135)


# கேள்வி அறிவித்தல்

## கட்டடங்கள் திணைக்களம்

### வடக்கு - கிழக்கு மாகாணம்

### திருகோணமலை

01. யாழ்ப்பாணம், கடற்கரை வீதியில் அமைந்துள்ள வடக்கு-கிழக்கு மாகாண கட்டடங்கள்திணைக்கள பிரதம எந்திரியினால் பருத்தித்துறையில் மத்திய மருந்தகம் நிர்மாணிப்பதற்குரிய கேள்விகள் 2001ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை இத் திணைக்களத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பெறப்பட்டகேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.

02. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம்-8 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையவராவர்;

03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில், மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 500 ஐயும் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச் சீட்டை யாழ்ப்பாணம் மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து 2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பத்திரம் வழங்கப்படும்.

05. கேள்வி கோருபவர் ஒருவர், ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் பெறுவதற்கு தகுதியுடையவராவர்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம், அத்துடன் ஏதும் மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாட்களில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி. ஏ. வேல்மாணிக்கம்,
தலைவர்
திணைக்கள கேள்விச் சபை

பணிப்பாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
வடக்கு - கிழக்கு மாகாணம்,
உட்துறைமுக வீதி,
திருகோணமலை,
திகதி : 21. 09. 2001.

(C-2634)



### நல்லூர் பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்காட்டப்படும் வேலைத்திட்டங்களை நிறைவேற்ற நல்லூர் பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன;

இவ் வேலைத்திட்டத்திகான கேள்விப்பத்திரங்கள் 21-09-2001ந் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 27-09-2001ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 8.00 மணிக்கு முன்பதாக பெற்றுக்கொள்ளுமாறும். சீல் வைத்த கேள்விகள் யாவும் 28-09-2001-ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் சமர்ப்பிக்குமாறும், தங்கள் கேள்விகளை கேள்விப்பத்திரத்தில் நிரப்பி ஒரு பிரதியை தலைவர், நல்லூர் பிரதேச சபை என விலாசமிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப்பெட்டியில் இடவேண்டும். மறுபிரதியை பி/உ. உ. ஆணையாளர், உள்ளூராட்சித்திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டும். கேள்விப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்;

அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் தங்களையும் பிரசன்னமாக இருக்கும் படியும் கேட்டுக்கொள்கிறேன்;

| இல. | வேலை விபரம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்விப் பத்திர ப. சே. வரி |
|---|---|---|---|---|
| 01, | சந்தை சுகாதார தொழிலாளர் விடுதி அமைத்தல் வேலை நிலை, கதவு, யன்னல் செய்தல்; | 600/- | 250/- | 31.25 |
| 02; | புத்தக ராக்கை செய்தல் | 1000/- | 250/- | 31;25 |

க. மணிபல்லவராஜன் (ஜே பி. யு. எம்.)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை;

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
20-09-2001;

(கி-2635]

# பாலானது சுண்டச் சுண்டச்சுவை கூடுகிறது

# பக்தனும் வருந்த வருந்தப்பக்குவமடைகிறான்

**வசந்தா மணாளன்**

குழந்தைக்குத் தாய் பேசக் கற்றுக்கொடுக்கிறாள். பேசவேண்டியது குழந்தையே, ஆசிரியர் மாணவனுக்குக் கல்வி போதிக்கிறார். கற்று அதன்படி நடக்க வேண்டியது மாணவனின் கடமையே! சந்திரனைக் காணத் தொலை நோக்கி தேவையா? சான்றோரின் புகழ் அவர் ஓரிடத்திலிருந்தாலும் உலகுக்கெல்லாம் உணர்த்தும் சத்தியம் என்ற அத்திவாரத்தின் மேல்கட்டப்பட்ட தர்மம் என்ற மாளிகை நிலைத்து நிற்கும். விருப்பு வெறுப்புகளுக்குட்பட்ட சந்நியாசியாக வாழ்வதைவிட, விருப்பு வெறுப்பற்ற சம்சாரியாக [தாமரை இலைத் தண்ணீரைப்போல] வாழ்வது மேலானது.

### மாறுபாடு

ஒரு புகைவண்டி ஒரு நிலையத்தில் பத்து நிமிடங்கள் தான் நிற்குமென்று தெரிந்தால், அதற்குள் இறங்கிவேண்டியவற்றை வாங்கிக் கொள்கிறோம். பத்து மணித்துளிகள் கூட நம் உயிர் நம் உடலில் இருக்குமென்பது உறுதியல்ல என்று தெரிந்திருந்தும், அதற்குத் தேவையான எதையும் நாம் செய்வதில்லை. கல்வியறிவும் செயல்திறமும் மனித வாழ்வு என்ற வண்டியின் இரு சக்கரங்கள். வண்டி ஓட ஒன்று மட்டும் போதாது; இரண்டும் வேண்டும். சர்க்கரை போட்ட தேநீரும். சர்க்கரைபோடாத தேநீரும் தோற்றத்தில் ஒரேமாதிரி இருந்தாலும், சுவைமாறுபடும். அதைப்போல ஞானிகளின் அருளுரையும், ஏட்டுக் கல்வியாளரின் இலக்கண உரையும் ஒன்று போலத் தோன்றினாலும், சுவைத்தால் மாறுபாடு புரியும்.

### உண்மையான கல்வி

மகளிர் சக்தியின் வடிவம். சக்தியின்றி எதையும் சாதிக்க முடியாது. பெண் என்றால் ஒழுக்க முடையவள் தான். ஒழுக்கமில்லாதவள் பெண் எனப்படமாட்டாள். வாழ்க்கை என்பது ஒரு நாளிதழ் அன்றாடம் பல புதிய செய்திகள் காணக்கிடைக்கின்றன. மருத்துவர்களும் ஒரு நாள் மரணமடைபவர்களே. ஆகவே அழிவுக்கு அஞ்சுபவன் அறிவிலி சிலம்பம் கற்றுத் தருபவன் தான் ஆடக்கற்றுக்கொண்ட பிறகே, பிறருக்குக் கற்றுக் கொடுப்பான். ஞானிகள் தாம் கற்றுணர்ந்த பிறகே பிறருக்குக் கற்றுத்தருவர். சந்நியாசிகள் ஓடும் நதிக்கு ஒப்பானவர்கள். ஓரிடத்தில் நில்லாமல் பலவிடயங்களில் திரிந்து, பலருக்கும் உதவி இறுதியில் இறைவனடி என்னும் கடலில் கலந்து விடுகின்றனர்.

அறம், பொருள், இன்பம், வீடு என்பவை நான்கு உயர்ந்த பொருள்கள் மட்டுமல்ல, அறவழியில் பொருளீட்டி இன்பமடைந்த பிறகு வீட்டை (மோட்சம்) அடைய வேண்டும் என்ற முறையும் கூறப்பட்டுள்ளது. ஒருகிண்ணம் நிறைய நீரை விறறால் கொள்வாரில்லை. அரைக் கிண்ணம் பாலைஅதில்கலந்து விட்டால் விற்றுப் போகும், பெரியோரரோடு சேர்ந்தால் சிறியோரும் உயர்ந்துவிடுவர். ஒரு சொல்லுக்குப் பல பொருள் காண்பதே உயர் கல்வி எனச் சிலர் கருதுகிறார்கள் இது தவறு. உளளத்தின் கதவுகளைத் திறக்கச் செய்வதே உயர் கல்வி. உண்மையான கல்வியுங் கூட.

### தூய்மை அவசியம்

பால் சுண்டச் சுண்டச் சுவை கூடும், பக்தன் வருந்த வருந்தப் பக்குவப்படுகிறான். வயிரச் சிமிழை விளக்குக் கொண்டுதான் தேட வேண்டுமா? பெரியோர்இருக்குமிடத்தை அவர் புகழே காட்டிக் கொடுக்கும். நீ புண்ணியம் தேடாவிட்டால் பரவாயில்லை, பாவம்செய்யாதிருந்தால் போதும். நமது உடல் இறைவன் தந்த போது ''ஒரு தூய்மையான இரவல் பாத்திரம்'' அதை அவனிடம் திருப்பித் தரும் போதும் தூய்மையானதாகத் தர வேண்டும். வழிப்பயணம் செய்பவன் பயணம் எப்போது முடியும் என்று ஏங்குகின்றான். வாழ்க்கைப் பயணம்செய்யும்போது எப்போது முடிந்து விடுமோ என்று அஞ்சுகிறான். பல நூல்களைப் பயில நமக்கு நேரமோ, காலமோ இல்லாதிருக்கலாம். பயின்றவர் தம் உரைகளைக் கேட்கவாவது நேரத்தை ஒதுக்க வேண்டும். பகலும், இரவும் போல, இன்பமும், துன்பமும், ஒன்றுக்குப்பின் ஒன்று வந்துவிடும்.

### தீய சிந்தனையை அகற்று

உளளத்தில் மகிழ்ச்சி இருந்தால் உலகம் வனப்பான சோலையாகத் தோன்றும். உள்ளத்தில் துன்பம் இருந்தால் வரண்ட பாலையாகத் தோன்றும், எதற்கும் அளவு வேண்டும். உண்பதற்குக் கூடத்தான். குறைந்தால் பசிக்கிறது. மிகுந்தால் சீரணிக்க மறுக்கிறது. பானையின் குறுகிய வாயினில், தலையை மாட்டிக் கொண்ட குரங்கு, யாரோ தன்னை அமுக்குவதாக எண்ணுகிறது. தன் வினைப் பயனால, குடும்பம் என்ற பானைக்குள் மாட்டிக் கொண்ட மனிதனும் இறைவன் தன்னைச் சோதிப்பதாகவே நினைக்கிறான், பிறரிடம் நூறுகுறைகளைக் காண்பதை விட, நம்மிடமிருக்கும் ஒரு குறையையாவது போக்கமுயல வேண்டும். நெருஞ்சிக்கு எல்லாப்பக்கங்களிலும முட்களே. அவ்வாறு தீயவர்களின் சொல், செயல் நினைவு எல்லாமே கொடியவை, துளசிச் செடியின் இலை, பூ, காய், வேர் எல்லாமே மணக்கும். உயர்ந்தவர்களின் எண்ணம், சொல், செயல், எல்லாமே சிறந்து விளங்கும். புற்றின் மீது அடித்தால் பாம்பு சாகுமா? தீய சிந்தனைகளிருப்பின், உடலைத் தண்டித்துப் பயனில்லை. அந்நினைவே எழாமல் ஒடுக்கவேண்டும்.

### அடக்கம்

இருபது அடிகள் அடித்தவன் இருபத்தி ஓராவது அடியில் பாறையைப் பிளக்கிறான். அந்த இருபது அடிகளும் வீணல்ல, பலநாட்கள் பக்தி செலுத்தியவன் ஒரு நாள் இறையருளை அடைவான். பக்தனின் இதயமென்னும் வானத்தில் சுடர்விடும் நட்சத்திரங்களே இறைவனின் நாமங்கள். ஓடும் மேகங்கள் உருமாறிக் கொண்டே இருக்கும். உறுதியற்ற உள்ளத்தில் எழும் எண்ணங்களும் அத்தகையனவே, மலர்களில் மல்லிகை. முல்லை என்று பற்பல சாதிகள் உண்டு. ஆனால் அவைகள் ஒன்றுக் கொன்று சண்டை போட்டுக் கொள்வதில்லை.

மூன்று கண்களையும் மூடி வைத்திருக்கும் தேங்காய் இறைவனைக்காண ஆலயத்திற்குச் செல்கிறது. இரண்டு கண்களைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கும் நாம் இறைவனைக் காண ஆலயத்திற்குச் செல்வதில்லை அன்னம் பரிமாறப்பட்ட இலை பறக்காது, வெற்று இலை காற்றில் பறக்கும். நிறைந்த அறிவுள்ளோர் அடக்கத்தோடிருப்பார், அல்லாதவர் அலட்டிக் கொள்வர். கடிவாளம் இல்லாத குதிரையும், பிரேக் இல்லாத மோட்டார் காரும், அழிவை நோக்கியே ஓடுகின்றன. கட்டுப்பாடற்ற மனிதனும் அவ்வாறே அழிவை நோக்கி ஓடுகிறான். □

## பாட்டு, பேச்சு போட்டிகள்

(வல்வெட்டித்துறை)

யாழ். கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் நடத்தப்படும் நான்கு பாலர் பாடசாலைகளுக்கிடையிலான பாட்டு, பேச்சுப் போட்டிகள் ஒக்ரோபர் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (செ-227)

## மீண்டும்பூஜை வழிபாடுகள்

(கொழும்புத்துறை)

அரியாலை நீர் நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் மீண்டும் பூஜை வழிபாடுகள் நடத்தப்படுகின்றன,

கடந்த ஆண்டு ஏற்பட்ட இடம் பெயர்வின்பின் பூட்டப்பட்டிருந்தஇவ் வாலயம அண்மையிலேயே திறக்கப்பட்டு பூஜை இடம்பெறுகின்றது. (செ-223)

## பொதுகூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

(வல்வெட்டித்துறை)

யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர், சாரதிகள், ஊழியர்கள் நலன் புரிச்சங்கத்தின்ஆண்டுபொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்படி தலைவராக வி. குமாரசாமியும், செயலாளராக க. செல்வராசாவும், பொருளாளராக இ. சிறிதரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (செ-217)

## இலவச ஆங்கில வகுப்பு

(வல்வெட்டித்துறை)

யாழ். கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் ஒக்ரோபர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து ஆண்டு 6 -10 வரையான மாணவர்களுக்கு இலவச ஆங்கில வகுபபுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆர்வமுடையவர்கள் இவ் வகுப்பில் கலந்து கொள்ளலாம் என அதன் செயலாளர் தெரிவித்துள்ளார். (செ-217)

## உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

(சுண்டுக்குளி)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் அகில இலங்கை ரீதியில் நடத்தி வரும் 12 வயதுக்குட்பட்டவர்களின் உதைபந்தாட்ட போட்டித் தொடரில் ஓர் அங்கமாக சண்டிலிப்பாய் கோட்டத்தில் நடைபெற்று வரும் போட்டிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் காலை தொடக்கம் மாலை வரை 6 ஆட்டங்கள் இடம் பெற்றன. இந்த ஆட்டங்களின் பெறு பேறுகள் வருமாறு;

இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரி அணி அதனை எதிர்த்து ஆடிய பிரான்பற்று கலைமகள் வித்தியாலய அணியை 3 : 0 என்ற கோல் கணக்கில் வென்றது;

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி அதனை எதிர்த்தாடிய நவாலி மகாவித்தியாலய அணியை 1 : 0 என்ற கோல் கணக்கில் வென்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும் சண்டிலிப்பாய் வடக்கு அ. மி. த. க வித்தியாலய அணிக்கும் இடையிலான ஆட்டம் இரு அணிகளும் கோல் எதையும் பெறாததினால் சமமாக முடிவுற்றது.

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி அணிக்கும் நவாலி மகாவித்தியாலய அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மெமோறியல் அணி 1 : 0 என்ற கோல் கணக்கில் வென்றது.

பண்டத்தரிப்பு கலைமகள் அணிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதையும் பெறாததால் ஆட்டம் வெற்றி சமமாக முடிவுற்றது.

இளவாலை சென் ஹென்றிஸ் அணிக்கும், சண்டிலிப்பாய் வடக்கு அ. மி. த. க வித்தியாலய அணிக்கும் இடையிலான ஆட்டத்திலும் இரு அணிகளும் கோல் எதையும் போடாததினால் ஆட்டம் சமமாக முடிவுற்றது.

இவ்வாட்டத்திற்கு மத்தியஸ்தர்களாக கப்ரின் டி. ஏ. எம். குணசிங்கம், இ. சுரேந்திரன், எஸ். உதயன் ஆகியோர் கடமையாற்றினார்கள். (க-110)

அமைச்சருடன்

## அடுத்த சந்திப்பு வெள்ளியன்று

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழி தெற்கு ஸ்ரீ மகாவிஷ்ணு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுடனான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இரண்டாவது சந்திப்பு எதிர் வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறவிருப்பதால், சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் காலை 8 மணியளவில் மணியம் கட்டடத்தில் இயங்கும் மனித கௌரவத்திற்கான மன்றத்திற்கு முன் கூடுமாறு அதன் இணைப்பாளர் ஐ. சிவராசா அறிவித்துள்ளார்.

மனித கௌரவத்திற்கான மன்ற ஏற்பாட்டில் முதலாவது சந்திப்பு கடந்த மாதம் 24 ஆம் திகதி இடம் பெற்றது குறிபபிடத்தக்கது. (உ)

## சுகவாழ்வு

எச். ஐ. வி தொற்றுள்ள ஒருவரைக் கட்டியணைப்பதாலோ, முத்தமிடுவதாலோ, கைகுலுக்குவதாலோ, சாப்பிடும்/ குடிக்கும் பாத்திரங்களைப் பகிர்ந்து கொள்வதாலோ எச். ஐ. வி/எயிட்ஸ் பரவமுடியாது.

(எயிட்ஸ் வருமுன் காப்போம்)

-தரிசனம்

## முரண்பாடுகளைத்தீர்த்தல் கருத்தரங்கு இன்று

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தி வரும் முரண்பாடுகளைத் தீர்த்தல் கருத்தரங்கு யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் எஸ். புண்ணியசீலன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசிரிய ஆலோசகர் திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம், தேசியக் கல்வி நிறுவக விரிவுரையாளர் திருமதி புஷ்பா சின்னையா, தேசியக் கல்வி நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தனலக்ஷ்மி வில்வநாதன், யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர் அ. குமாரவேல் ஆகியோர் இதில் கலந்து கருத்துரை வழங்குவர். (உ)

## கைதான இளைஞர் இருவர் காங்கேசன் தடுப்பு முகாமில் பொலிஸார் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் இருவர் காங்கேசன் துறை தடுப்பு முகாமில் உள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார், யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு அலுவலகத்திற்கு அறிவித்துள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து அங்கு வைத்து கைது செய்யப்பட்ட மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அனோஜ் வீடியோக் கடை ஊழியரான சந்திரசேகரன் சுதர்சன் (வயது 23), கடந்த 20 ஆம் திகதி கைது செய்யப்பட்ட சந்திரன் நிரோஜன் ஆகிய இருவருமே தடுப்புக்காவலில் உள்ளதாகப் பொலிஸாரால் அறிவிக்கப் பட்டுள்ளது

சந்திரசேகரன் சுதர்சன் கைது செய்யப்பட்டமை தொடர்பாக அவரது தாயாரினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-10)

## செய்தித்துளிகள்

### மட்டக்களப்பில் 3 பொதுமக்கள் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரான் பகுதியில் நேற்று முன் தினம் காலை இடம்பெற்ற கிரனைற் வீச்சு, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் சிக்கி மூன்று பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்;

வீதிப்பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது கிரனைற் வீசப்பட்டதாகவும் இதனையடுத்து படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது;

காயமடைந்தவர்கள் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்; (ந- 4)

### மலசலகூட அமைப்புக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் கணேசா சனசமூக நிலைய ஒருங்கிணைப்புடன் 'லீட்ஸ்' நிறுவனம், புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த தெரிந்தெடுக்கப்பட்ட 6 பயனாளிகளுக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான மலசலகூட அமைப்புக்கு தேவையான பொருட்களை வழங்கியுள்ளது; (உ)

### கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வானவில் விளையாட்டுக் கழகம், 9 பேர் கொண்ட 15 ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது;

இதற்கான விண்ணப்ப முடிவு தினம் இம் மாதம் 29 ஆம் திகதியாகும். (உ-106)

### அவசர கூட்டம்

(புலோலி)

யாழ். மாவட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கான அவசர கூட்டமொன்று நாளை யாழ்ப்பாணத்திலுள்ள மணியம் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

அவர்களுக்கான கொடுப்பனவுகள் பற்றி இக்கூட்டத்தில் கலந்துரையாடப்படுவதால் சகல அபிவிருத்தித் தொண்டர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அபிவிருத்தித் தொண்டர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்; (உ- 52)

### ஆசிரியை மரணம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேட வகுப்பு நடத்திக் கொண்டிருந்த ஆசிரியை திடீரென மயங்கி வீழ்ந்து மரணமானார்;

யாழ். தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய ஆசிரியையான செல்வி சிவரூபி வேலுப்பிள்ளை என்பவரே கடந்த சனியன்று இவ்வாறு மரணமானார்; (உ)

### சிற்றூர்தி சேவை ஆரம்பம்

(கல்வயல்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் வரையான சிற்றூர்திச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது;

மீளக்குடியமரும் மக்கள் தமது உடைமைகளை எடுத்துச் செல்வதற்கு இது பெரும் வாய்ப்பாக இருப்பதாகக் கூறப்படுகிறது; [உ-111]

### பரிபாலன சபை உறுப்பினர்கள் தெரிவு

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி ஆலயத்தின் புதிய பரிபாலன சபைஉறுப்பினர்களாக:

தலைவராக த.தவராஜா, உப-தலைவராகவை, ஸ்ரீஸ்காந்தன் செயலாளராக-செல்வி ம,சுப்பிரமணியம், உப-செயலாளராக,சு நித்தியானந்தன், பொருளாளராக கா-நித்தியானந்தன் ஆகியோர்களும் நிர்வாகசபை உறுப்பினர்களாக-கு சந்திரன் மு,கிருஷ்ணபிள்ளை, மு. க திருலோகநாதன், செ.நாகரதினம் அ,கந்தையா ,மகேந்திரன்' ஆகியோர்களும், தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (செ-103)

### செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

1999ஆம்ஆண்டு சாரணிய, குருளைச்சாரணிய அவத்தை IVபயிற்சி பெற்ற சாரணியத்தலைவர்களும், குருளைச் சாரணிய தலைவர்களும் தங்கள் செயற்பாட்டு அறிக்கைகளை உடன்பூர்த்தி செய்து அனுப்பி வைக்கும் படி கிளிநொச்சி மாவட்ட ஆணையாளர் மா.புவனேந்திரன் தெரிவித்துள்ளார்; (உ-229)

### ப. நோ. கூ. சங்கம் மீண்டும் அதேயிடத்தில்

(கொழும்புத்துறை)

அரியாலைப்பகுதியில் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 19ம்இலக்கக் கிளை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது;

கடந்த ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் பின் இக்கிளை மூடப்பட்டு வேறோர் இடத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (செ- 223)

### வெளிக்கள தின விழா போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட குருளைச் சாரணர் வெளிக்கள தின விழா வரும் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளதால், இவ் விழாவையொட்டி நடத்தப்படவுள்ள போட்டிகளில் கலந்து கொள்வோர் விண்ணப்பங்களை இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் உதவிமாவட்ட ஆணையாளர் திருமதி ஈ.ஐ. தேவமித்திரனுக்கு அனுப்பி வைக்குமாறு சாரணர் குழுத் தலைவர்களை யாழ். மாவட்டஆணையாளர் கேட்டுள்ளார்; (உ)

### அஞ்சல் அதிபர் போட்டிப் பரீட்சை

(துன்னாலை)

அஞ்சல் அதிபர்களை தெரிவுசெய்வதற்கான போட்டிப்பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது;

இப்போட்டிப் பரீட்சையில் தற்பொழுது உப அஞ்சல் அதிபராக இருப்போர் மற்றும் பத்துவருட சேவையை முடித்துக் கொண்ட தபால் ஊழியர்களும் பங்குபற்றலாம்.

இவர்களிற்கான பரீட்சை வழிகாட்டி வகுப்புக்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் யா/இந்துக்கல்லூரி யா / பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் காலை 8 . 30 மணிமுதல் மாலை 5.00மணி வரை நடைபெற்று வருகின்றது; [உ-41]

# மூலிகை ஆராய்ச்சிக்காக மாதப்பத்திரிகை வெளியிட வேண்டும்

## சித்த ஆயுர்வேத அபிவிருத்திசபை கூட்டத்தில் கருத்து

(யாழ்ப்பாணம்)

ஆங்கில வைத்தியர்களின் சிகிச்சை பலனளிக்காத பலருக்கு சித்த ஆயுர்வேத சிகிச்சை பலனளித்து உயிர் தப்பிய வரலாறுகள் உள்ளன;

உள்ளூரில் காலத்துக்கு காலம் தோன்றிய சித்தஆயுர்வேத வைத்தியர்கள் பலரும் கால நேரம் பாராது, இரவு பகல் கருதாது தன்னலம் கருதா வைத்தியப் பணிகளை ஆற்றி அதற்கு உயிர்ப் பூட்டியுள்ளனர்;

யாழ்.மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்திய அபிவிருத்திச் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆனைப்பந்தி மெதடிஷ்த மிஷன் வித்தியாலயத்தில் நடைபெற்றபோது அதில்கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் வி.சிவசாமி இவ்வாறு தெரிவித்தார்;

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

நமது முன்னோர் அனுபவ மூலமாக கண்டுணர்ந்து கடைப்பிடித்த சித்த ஆயுர்வேத மருத்துவத்தை சிதைவுறாது கட்டிக்காக்க வேண்டியது இன்றைய தலைமுறையின் கடமை என்றார்.

இக் கூட்டத்தில் தலைமை வகித்த வைத்திய கலாநிதி சிவானந்தன் தனதுஉரையில்,

எமது நாட்டிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலும் இத்தகைய எமது சித்தாயுர் வேத மருத்துவ அபிவிருத்திக்கு நாம் அனேக பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது;

அவற்றில் சிறந்த மருத்துவ நூல்களை ஆராய்ந்து அச்சில் புதுப்பித்து வெளியிடுதல் மிக முக்கியமானது, அதேவேளையில், மூலிகை ஆராய்ச்சிக்காக மாதப் பத்திரிகை ஒன்றை வெளியிடுதல் அவசியமானது.

நவீன வசதிகளுடன் உள்ளூரிலேயே சிறந்த சித்தாயுர்வேத மருந்துகளைத் தயாரித்தல் வேண்டும்;

அதற்காக வேண்டிய இயந்திர சாதனங்கள், உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், சித்தஆயுர்வேத மருந்து உற்பத்தி விற்பனை நிலையங்களை கிராமம் தோறும் அமைத்தல், ஏழைகளுக்கு இலவச சிகிச்சையும் ஆலோனையும் வழங்குதல் என்பன உட்பட இச்சபை பல அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துள்ளது; இவற்றை நிறைவேற்ற ஒவ்வொருவரும் தம்மாலான உதவிகளை வழங்குவீர்கள் என நம்புகின்றேன் என்றார்; (உ)

## இராசிபலன்

25/9/2001
புரட்டாதி 9 செவ்வாய்
அட்டமி மு.ப. 7.55 வரை
மூலம் மு.ப. 7.02 வரை
ராகுகாலம் 3.02 – 4.32
நல்லநேரம் 10.32 – 12.02
அமிர்தசித்தம்

**மேடம்**
ஆன்றோர் ஆசி, வீண் பயம், உடல் நலக் குறைவு, இனசனத் தொடர்பு;

**இடபம்**
துயரம், காரியத் தடங்கல், உறவினர் மனஸ்தாபம்;

**மிதுனம்**
நண்பர்கள் உதவி, போசன சுகம், திடீர் பயணம், முயற்சி கைகூடும்.

**கடகம்**
லட்சுமிகரம், நினைத்த காரியம் கைகூடும், தொழில் விருத்தி, ஆரோக்கியம்;

**சிங்கம்**
தாழ்வு நிலை, வியாபார நன்மை, முயற்சி தாமதம், குடும்பக் கவலை;

**கன்னி**
மனப்பதட்டம், போசன சுகம், பெரியோர் வெறுப்பு, காரியதாமதம்,

**துலாம்**
அந்நியர் சந்திப்பு, காரிய அனுகூலம், இனிய சம்பவம், தனவரவு;

**விருச்சிகம்**
தநதை வழி நன்மை, வீண் விரோதம், முயற்சி தாமதம், பொருள் விரயம்;

**தனுசு**
தொழில் சிறப்பு, சயன சுகம், போசன சுகம், மனக் குழப்பம்;

**மகரம்**
நிலைமாற்றம், நித்திரைக் குறைவு, கலகம், காரிய தாமதம்,

**கும்பம்**
தனலாபம், காரியநன்மை, வரவேற்பு, மனச் சஞ்சலம்;

**மீனம்**
தொழில் மேன்மை, முயற்சி கைகூடும், அதிகாரம், குடும்ப சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## விவசாயிகள் மீது தாக்குதல் ஒருவர் பலி; மூவர்காயம்

### ஊடகத் தகவல் மையம் அறிவிப்பு

(கொழும்பு)

மன்னம்பிட்டிக்கு கிழக்கே சுமார் 13 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பொரவெவ என்ற சிங்களக் கிராமத்தில் கடந்த 22 ஆம் திகதி நெல் அறுவடை செய்து கொண்டிருந்த கமக்காரர் மீது நடத்திய தாக்குதலில்,

விவசாயி ஒருவர் கொல்லப்பட்டதாகவும்,

பெண் உட்பட மூவர் படுகாயமடைந்ததாகவும் விசேட ஊடகத் தகவல் மையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை மேற்கொண்டதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது; (உ)

## தென்மராட்சிப் பகுதி தென்னைகளிலும் மைற்ஸ் நோய் தாக்கம்

(கல்வயல்)

கொடிகாமம் பகுதி தென்னைகளும் மைற்ஸ் நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் தென்னைகளுக்கு மைற்ஸ் நோய் மருந்து தெளிக்கப்பட்ட போதிலும், இப்பகுதித் தென்னைகளுக்கு இம் மருந்து தெளிக்கப்படவில்லை.

இதேவேளை, வடபகுதிக்கான தேங்காய் தேவையை பெருமளவில் பூர்த்தி செய்து வரும் தென்மராட்சிப் பகுதியிலும் இந்நோயின் தாக்கம் ஏற்பட்டிருப்பது, தேங்காயின் விலையை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது; (உ-111)

## சட்டவிரோத கட்டடங்களை அகற்ற அரச அதிபர் உத்தரவு

(புலோலி)

பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான பருத்தித்துறை, தும்பளை பிரதான வீதியில் உள்ள தெங்கன் கிணற்றடி காணிக்குள் அத்துமீறி அமைக்கப்பட்ட சட்டவிரோத கட்டடங்களை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபர் பருத்தித்துறை நகரசபைக்கு அவசர அறிவித்தல் மூலம் உத்தரவிட்டுள்ளார்;

இக்காணி 1971ஆம் ஆண்டு நகரசபையால் சுவீகரிக்கப்பட்டதாகும்;

இக்காணியில் தற்போது சட்டவிரோதமான தேநீர்க்கடை இயங்கி வருகின்றது.

இந்நகரசபைக் காணியில் அத்துமீறி தேநீர்க்கடை வைத்திருப்பவரை வெளியேறுமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பணிப்பின் பேரில் பருத்தித்துறை நகரசபை கோரியிருந்ததும் குறிப்பிடத்தக்கது;

எனினும் அத்துமீறிக்குடியேறிய தேநீர்க்கடை உரிமையாளர் இன்னும் நகரசபைக் காணியிலிருந்து வெளியேறவில்லை.

கடந்தவாரம் பருத்தித்துறை மத்திய மருந்தகம் அமைப்பது தொடர்பாக காணித் தெரிவுக்காக யாழ்; மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் யாழ். உள்ளூராட்சித் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர் எஸ்; பாலசுப்பிரமணியம் ஆகியோர் அடங்கிய விசேட குழுவொன்று பருத்தித்துறைக்கு விரைந்து பருத்தித்துறை மத்திய மருந்தகம் அமைப்பதற்கு காணியைத் தெரிவு செய்தது:

இதனையடுத்தே தெங்கன் கிணற்றடியிலுள்ள சட்டவிரோத கட்டடங்களை உடன் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை நகரசபைக்கு உத்தரவிட்டுள்ளார்;

சட்ட விரோத கட்டடங்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறைநகரசபை துரிதமாக மேற்கொண்டுள்ளது. (உ-52)

## இன்று ஒரு தகவல்

# இந்து மதம் முந்திய மதம்

இந்து மதத்துக்கு எந்தப் பெயரும் இல்லை என்று சொல்லுகிறார்களே, அது ஏன்? அப்புறம் ஹிந்து என்ற பெயர் எப்படி வந்தது? என்று கேட்கக் கூடும். தமிழ் நாடடைத் தெலுங்கர்கள் 'அரவா நாடு' என்று சொல்வார்கள். ஆந்திரப் பிரதேசத்தின் கீழேயுள்ள சிறியபகுதிக்கு 'அரவா தேசம்' என்று பெயர். அப்புறம் வரும் பகுதிகளுக்கும் அதே பெயரை வைத்துவிட்டார்கள். இதே ரீதியில்தான் சிந்துப் பிரதேசத்தைக் கண்ட அந்நியர்களும் அதை அடுத்து வந்த பாரத தேசத்தை ஹிநது தேசமாக்கிவிட்டார்கள். அங்கேயுள்ள மக்களின் மதமும் இந்துமதம் என்று பெயர் பெற்றுவிட்டது.

ஆனால் ஹிந்து என்பது நம்முடைய பூர்வீகப் பெயர் அல்ல. வைதிக மதம், சனாதன தர்மம் என்றெல்லாம் சொல்லுகிறோமே அவை தான் பெயரா என்றால், அதுவும் இல்லை. நம்முடைய ஆதார நூல்களைப் பார்க்கும் போது இந்து மதத்துக்கு எந்தப் பெயருமே குறிப்பிடப் படவில்லை. இதைப் பற்றி நினைத்த போது எனக்கு மிகவும் குறையாக இருந்தது. இது இப்படி இருக்கட்டும்.

ஒரு நாள் யாரோ 'ராமு வந்திருக்கிறான்' என்று என்னிடம் சொன்னார்கள். உடனே நான் ஏதோ நினைவில், 'எந்த ராமு?' என்று கேட்டேன். 'எந்த ராமுவா? அப்படியானால் ராமுக்களில் பல பேர் இருக்கிறார்களா?' என்று எதிர்க் கேள்வி கேட்டார்கள். அப்போது தான் எனக்குப் பழைய ஞாபகத்தில் இப்படிக் கேட்டுவிட்டோம் என்று தெரிந்தது. எங்கள் ஊரில் ராமு என்ற பெயரில் நாலு பேர் இருந்தார்கள். எனவே அவர்களுக்குள் வித்தியாசம் தெரிந்து கொள்வதற்காக கறுப்பு ராமு, சிவப்பு ராமு, நெட்டை ராமு, குட்டை ராமு என்று சொல்வது வழக்கம். அதே நினைவில் தான் ஒரேயொரு ராமு இருந்தஊரிலும் நான் ''எந்த ராமு' என்று கேட்டு விட்டேன். ஒரேயொரு ராமு இருக்கிற இடத்தில் எந்த அடைமொழியையும் போட வேண்டியதில்லை.

நம் மதத்துக்கும் ஏன் பெயர் இல்லை என்பதும் உடனே புரிந்துவிட்டது. பல் வேறு மதங்கள் இருக்கிற போது தான், ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு வித்தியாசம் தெரிவதற்காகப் பெயர் கொடுக்க வேண்டும். ஒரே மதம் தான் இருந்ததென்றால் அதற்குப் பெயர் எதற்கு? மற்ற மதங்கள் உண்டாவதற்கு முன்பே நமது மதம் இருந்திருக்கிறது. இந்த ஒரு மதமே உலகமெல்லாம் பரவி இருந்திருக்கிறது. இதைத் தவிர வேறு மதம் இல்லாததால், இதற்குப் பெயர் குறிப்பிட வேண்டிய அவசியமே இருக்கவில்லை. இதை அறிந்தவுடன் முன்பு எனக்கு இருந்த குறை மறைந்தது, அத்தோடு இந்து மதத்தைப் பற்றிக் கௌரவ புத்தியும் உண்டாயிற்று. □

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதி

# அரசு எம்மைத் தேடிவரும் காலம் தூரத்தில்இல்லை
## ஹக்கீம் நம்பிக்கை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக்காலம் அடுத்த வரவுசெலவு திட்டத்துடன் முடிவடைந்துவிடும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நிந்தவூர் பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் சலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் உரையாற்றும்போது; புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் பொதுஜன ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணியிடம் அடிமையாக உள்ளது: இந்த அடிமைத்தனத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரும்பினால் மீட்டெடுக்க முடியும்என்று தெரிவித்தார்.

அரசியல் லாபம்தேடும் நோக்கிலேயே இவ்விருகட்சிகளும் புரிந்துணர்வு ஒப்பந்ததை கைச்சாத்திட்டுள்ளன. இதனால் மக்கள் எந்த விதமான நன்மையும் அடையப்போவதில்லையெனவும் தெரிவித்தார்.

அடுத்த வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது, பொதுஜன ஐக்கியமுன்னணி அரசு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைத் தேடி வரும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (உ-4)

### மீன்பிடித்
# தடைக்கு எதிரான ஆர்ப்பாட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கடலில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரி இன்று அங்கு ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

வல்வை நகரசபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம், ஆதிகோயிலடி கடற்றொழிலாளர் சங்கத்துடன் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துவருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இன்றைய மீனவர்களின் போராட்டத்துக்கு உடன் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் குடாநாடு முழுவதும் மேற்படி ஆர்ப்பாட்டத்தை நடத்தத் திட்டமிட்டிருப்பது தெரிந்ததே. (உ)

# ஒளிப்பதிவு நாடா அனுப்பும் பணி ஆரம்பம்

யாழ். பிரதம தபால் அலுவலகத்தில் நாளை புதன் கிழமை தொடக்கம் ஒளிப் பதிவுநாடா பொறுப்பேற்கப் படும்என்று பிரதிபிரதமதபாலதிபர் அறிவித்துள்ளார்.

இப்பணி காலை 9-00 மணி முதல் நண்பகல் வரை இடம் பெறும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-3)

### புத்த பகவானின்
# புனித கண்காட்சியை பார்வையிடும் பக்தர் மீதும் பாதுகாப்பு கெடுபிடி

(கண்டி)

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் இடம்பெறும் புத்த பகவானின் புனித தந்த கண்காட்சியைத் தரிசிக்கச் செல்லும் அரசியல் பிரமுகர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உட்பட அனைவரும் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது.

இவ்வாறான பாதுகாப்பு முன்னேற்பாடு கருதி தீவிர சோதனை நடவடிக்கை இடம் பெறும் என்பதை கண்டி பொலிஸ் அதிகாரிகள், பத்திரிகையாளர் மாநாடொன்றில் ஏற்கனவேதெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமான இக்கண்காட்சி எதிர் வரும் 7 ஆம் திகதி வரை இடம்பெறவிருக்கிறது.

இதனைத்தரிசிக்க வருபவர்கள் பூஜைப் பொருட்கள் தவிர, கையடக்கத் தொலைபேசிகள், பைகள், புகைப் படக் கருவிகள், வீடியோ கருவிகள், ஆயுதம் எதுவும் எடுத்துவரக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு செல்லும் சகலரும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டு வருவது குறித்து பார்வையாளர்கள் பலர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (உ)

## புகையிலை பயிர்ச் செய்கை

(புலோலி)

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலைப் பயிர்ச் செய்கைக்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்முதற்கட்டமாக புலோலி, துன்னாலை, அவ்வாய், கரணவாய், வல்வெட்டி ஆகிய இடங்களில் புகையிலை நாற்றுமேடைகளை அமைப்பதில் விவசாயிகள் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். (அ-52)

## சிவில்நிர்வாக காரியாலயம் திறப்பு

(கொழுமபுத்துறை)

கொழும்புத்துறை கணக்கர் சந்திப் பகுதியில் சிவில் நிர்வாகக் காரியாலயம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப் பட்டுள்ளது. (உ-223)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றில் நவராத்திரி விழா இம்முறை சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேற்படி கலாசாலைகளின் இந்து மன்றப் பொறுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ-106)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள்ஆலய தேர்த்திருவிழா நாளைபுதன் கிழமையும் தீர்த்தத்திருவிழா நாளை மறுதினம் வியாழக் கிழமையும் நடை பெறவுள்ளன. தேர் உற்சவதினத்தனறு புதிதாக அமைக்கப் பட்ட லக்சுமி-நாராயணன் மண்டபத்தில் அன்னதானமும் நடைபெறவுள்ளது. (செ-106)

## இந்திய அருடதந்தையர் இங்குவருகை

(மானிப்பாய்)

இந்தியாவில் முரிங்கூர் என்னுமிடத்தில்வாராந்தம் கூடும் ஆயிரக்கணக்கான இறை பக்தர்களுக்கு ஆன்மிக விடுதலை அளிதது வரும் 'டிவைன்சென்ரர்' எனப்படும் தியான இல்ல அருட்தந்தையர்கள், யாழ். ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் அழைப்பை ஏற்று யாழ். மறைமாவட்டத்திற்கு முதன் முறையாக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் வருகை தரவுள்ளனர்.

இத்தியான வழிபாடுகள் முறையே யாழ்பபாணம், மானிப்பாய், பருத்தித்துறை, மற்றும் தீவகத்தில் நடத்தப் பட உள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-832)

## உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு 'படி' இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு 'படி' இதழ் வெளியிடப் படவுள்ளது.

இவ்விதழில் பீடாதிபதி தி. கமலநாதனின் பகிர்வு மற்றும் ஆசிரியர் பயிற்சியின் தேர்ச்சிகள், உளப்பகுப்பாய்வில் கனவுகள், மனித விடுதலைக்கான கல்வி, பாலர்கல்வி போன்ற பல அம்சங்களுடன்,

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சபா ஜெயராசா எழுதிய 'ஆசிரியத்துவ ஐந்தொகை' கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் எழுதிய 'கல்வியும் சமூக மேம்பாடும் ஒரு மாற்றுக் கருத்து' தேசிய கல்வி நிறுவக செயற்றிட்டப் பணிப்பாளர் ஜெயசேனபுத்பிட்டிய எழுதிய 'சிறந்த பாடசாலையும் ஆசிரியர் தொழில் வாண்மையும்' கல்வி உயர்கல்வியமைச்சு உதவிப் பணிப்பாளர் எஸ் ஜலால் தீன் எழுதிய 'நூலக விஞ்ஞானமும் தகவல் தொழில் நுட்பமும்' ஆகிய விசேட கட்டுரைகளும் இவ்விதழுக்கு அழகூட்டுகின்றன. (செ)

### மலையக மக்களின்
# பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு

(கொழும்பு)

மலையக மக்களின் பிரச்சினை குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் எதிர்வரும் 27 ஆம் திகதி சந்தித்துப் பேசவுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் கண்டி, மாத்தளை மாவட்டங்களின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள், அமைப்பாளர்கள் மற்றும்மாதர்சங்கப்பிரதிநிதிகள், வாலிபர் சங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அமைச்சர் தொண்டமான் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய வம்சாவளி மக்களின் வீடு, காணி, கல்வி சுகாதாரம் ஆகிய அடிப்படை வசதிகளிலுள்ள குறைபாடுகளை அறிந்து, அதனை ஜனாதிபதியிடம் தெரிவிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ-4)

### இலவச மருத்துவ
# சிகிச்சை முகாமும் கண் பரிசோதனையும்

(நல்லூர்)

சுன்னாகம் லயன்ஸ்கழகத்தினால், சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தின் சிவன் முன்பள்ளியில் அண்மையில் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் கண்பரிசோதனை என்பன டாக்டர் வி. யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இச் சேவையில் 76 பேருக்கு கண் பரிசோதனை நடத்தப் பட்டுள்ளதுடன், 67 பேருக்கு இலவச மூக்குக்கண்ணாடி வழங்க சிபார்சு செய்யப்பட்டது.

மருத்துவ சிகிச்சையின் போது 154 பேருக்கு இலவசமாக மருந்துகளும் வழங்கப் பட்டது.

தவிர, 79 பேருக்கு குருதி அமுக்கப் பரிசோதனை செய்யப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக 4 பேர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நீரிழிவுப் பரிசோதனைமேற்கொள்ளப்பட்ட 84 பேரில் 5 பேர் நீரிழிவு நோய் உள்ளவர்கள்எனவும் இனம்காணப் பட்டனர். (உ-103)

## சிந்தனைக்கு விருந்து

### அற்றது அவன் வாழ்வு

அப்பாவிப் பிள்ளைமதன் ஆராரோ கோள் சொல்லச்
சிப்பாய்கள் வந்தவனைச் சிக்கெனவே - தப்பாது
பற்றிப் பிடித்துப் பதைபதைக்க வேவதைந்தார்
அற்றதவன் வாழ்வென் றறி.

'பழையவன்'

## பங்களாதேஷில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் குண்டு வெடிப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் குண்டு வெடித்ததில் 7 பேர் பலியாகியுள்ளனர் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் பங்காளதேஷின் முன்னாள பிரதமர் ஷேக்ஹசீனாவின் அவாமிலீக் கட்சியின் பிரதம வேட்பாளர் ஒருவர் பேசிக் கொண்டிருக்கையில் இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

இக்குண்டு வெடிப்பில் கட்சிப் பிரமுகர் எவருக்கும் சிறு காயம் கூட ஏற்படவில்லை என்றும் பலியான 7 பேரும் பொது மக்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

## கண்ணிவெடியில் சிக்கி 12 றிசேவ் பொலிஸார் பலி

### ஜார்க்கண்ட மாநிலத்தில் சம்பவம்

(கஸாரி)

ஜார்க்கண்டு மாநில மலைப் பகுதியில் தீவிரவாதிகளின் தொடர் கண்ணி வெடியில் சிக்கி 12 றிசேவ் பொலிஸார் கொல்லப்பட்டனர்.

இக்கண்ணி வெடியை மாவோ தீவிரவாதிகளே வெடிக்க வைத்ததாகச் சொல்லப் படுகிறது.

சீ. ஆர். பி. எஸ். பொலிஸ் படையைச் சேர்ந்தவர்கள் சோதனைப்பணிக்குச் சென்ற பொழுதே இக்கண்ணி வெடியில் சிக்கிப் பலியானார்கள்.

காயமுற்ற 9 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலதிக படையினர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். (து)

## உரத் தொழிற்சாலை வெடி விபத்துக்கு உள் தகராறு காரணம்

(பாரிஸ்)

பிரான்ஸில் 25 பேரைப் பலிகொண்ட உரத் தொழிற்சாலை வெடி விபத்திற்கு, தொழிற்சாலையின் உள்ளகத் தகராறேகாரணம் என புலன் விசாரணை அறிக்கை தெரிவிப்பதாக பிரான்ஸ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பிரான்ஸின் ருரூட்ஸ் பகுதியில் அமைந்துள்ள உரத் தொழிற்சாலையில் இடம் பெற்ற வெடி விபத்திற்கு பிழையான இரசாயனப்பகுப்பாய்வே காரணம் என ஏற்கனவே அறிக்கை வெளியிட்டமை தெரிந்ததே.

ஆனால் தொழிற்சாலை ஊழியர் இருவருக்கிடையே இடம்பெற்ற வாக்கு வாதத்தின் பின்னர் இடம் பெற்ற கைக்கலப்பே வெடிவிபத்தினை உருவாக்கியுள்ளதாக புலன் விசாரணை அறிக்கைகள் தெரிவிப்பதாக தலைநகரில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (உ-7)

## அமெரிக்காவின் இலக்கு ஆப்கான் மக்களல்ல

### கொலின் பவல் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

தற்போதைய அமெரிக்காவின் எதிரி பின்லேடனே தவிர, ஆப்கானிஸ்தான் மக்களல்ல என்று அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

ஒஸாமாபின்லேடனையும் அவரது தீவிரவாத அமைபபு உறுப்பினர்களையும் மாத்திரமே அமெரிக்கா பின்தொடர்கிறதே தவிர, ஆப்கான் மக்களையல்ல என்று தெரிவித்த இராஜாங்க அமைச்சர் பவல்,

பின்லேடனை நாம் ஒழிப்பதாக இருந்தால் ஆப்கான் மக்கள் ஒத்துழைப்புத்தர வேண்டும்.

இதற்கு மறுப்புத் தெரிவிக்கும்பட்சத்தில்பின்லேடன்மீது தாக்குதல் நடத்தும் போது ஏற்படும் விபரீதங்களுக்கு நாம் பொறுப்பானவர்கள் அல்ல என்று மேலும் தெரிவித்துள்ளார். (உ-7)

## இஸ்ரேல்-பலஸ்தீன பிரமுகர்களின் சந்திப்பு இறுதி நேரத்தில் ரத்து

### புஷ்ஷின் திட்டம் புஸ்வாணம்

(ஜெருசலேம்)

இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் சிமோன் பரஸ் மற்றும் பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்திற்கும் இடையில் நேற்று இடம்பெறவிருந்த சந்திப்பை இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் ரத்துச் செய்துள்ளார்.

ஏரியல் ஷரோனின் இந்த முடிவினால் பயங்கரவாதத்திற்கு எதிரான கூட்டணி ஒன்றை உருவாக்கும் புஷ்ஷின் திட்டத்திற்கு பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக கருதப்படுகிறது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் காஷாப்பகுதி குடியிருப்பு ஒன்றில் பிரங்கிக் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றதும் இச் சந்திப்பு ரத்துச் செய்யப்பட்டமைக்கு காரணம் என இஸ்ரேலின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

48 மணித்தியாலங்கள் அமைதியாக கடந்தால்தான் சந்திப்பு இடம் பெறும்என்று ஏரியல்ஷரோன் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஷரோனின் இக் கூற்றை மறுதலித்த பலஸ்தீன அமைச்சர் ஒருவர், சர்வதேச அழுத்தம் காரணமாகவே ஷரோன் பேச்சுக்களுக்கு உடன்பட்டார். அதனையும் பொருத்தமில்லாத சில காரணங்களைக் காட்டி தடை செய்யப் பார்க்கிறார் என்று குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனால், சீமோன் பரஸிற்கும் அரபாத்திற்கும் இடையில் விரைவில் அமைதிப் பேச்சுக்கள் இடம்பெறவேண்டும் என்பதில் தான் அக்கறையுடன் இருப்பதாக ஏரியல் ஷரோன் தன்னிடம் தெரிவித்ததாக அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், பலஸ்தீன தலைவர்களில் ஒருவரான மரோன் பக்புஜ்ஜியை விரைவில் தம்மிடம் ஒப்படைக்குமாறு இஸ்ரேல் கேட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## அமெரிக்காவுக்கு உதவும் உலக நாடுகளின் அறிவிப்புகள் பேரம் பேசலின் எதிரொலிகளே!

பயங்கர வாதத்திற்கு எதிரான அணியில் அமெரிக்காவுடன் சேர்வதற்கு பேரம் பேசப்படுகிறதா, பேரம் பேசப்படவில்லையா என்ற சர்ச்சைகள் கிளம்பியுள்ளன.

அமெரிக்க நகரங்களான வாஷிங்டனும்நியூஜேர்சிக்கும் தற்கொலை விமானங்களால் தாக்கப்பட்டதால், தலிபானிலிருக்கும் பின்லேடனையும் அவனது இயக்கத்தையும் அழிப்பதற்கு பலநாடுகள் அமெரிக்காவுடன் அணி சேர்கின்றன.

பாகிஸ்தான் பின்லேடனைப் பிடித்துத் தருவதாக பேரம் பேசியது. அதாவது காஷ்மீரைவைத்து நிபந்தனை விதித்தது. இதுகுறித்து இந்தியாவின் பக்கத்திலிருந்து பெரும் சந்தேகங்களும் எதிர்ப்புக்களும் எழுந்தன.

தான் எந்த நிபந்தனையுடனும் பாகிஸ்தானுடன் பேசவில்லைஎன்று அமெரிக்கா திட்டவட்டமாக இந்தியாவிற்குக்கூறியது. இவ்விடயத்தில் இந்தியா தாம் பயங்கரவாதத்தை அடக்குவதற்கே அமெரிக்காவுடன் ஒத்துழைப்பதாகவும் எத்தகைய பேரத்தையும் அவர்களுடன் பேசவில்லைஎன்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் அமெரிக்கா மறைமுகமான பேசாத ஒரு பேரத்தை தானாகவே இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் சூசகமாக அறிவித்துள்ளது.

அதாவது, பயங்கரவாத எதிர்ப்பு அணியில் தம்முடன் இந்தியாவும் பாகிஸ்தானும் தாமாகவே சேர்ந்துகொள்வதற்கு வழி சமைப்பதுபோல் அந்தநாடுகள்மீது விதித்திருந்த பொருளாதாரத் தடையை அமெரிக்கா நீக்கியுள்ளது.

அமெரிக்கா பக்கம் சேராதிருந்த ரஷ்யா இப்பொழுது சேர்ந்து பயங்கரவாதத்தை அடக்கப் போவதாக அறிவித்துள்ளது அமெரிக்க வெளிவிவகார அதிகாரிகள் ரஷ்யாசென்று என்ன பேரம் பேசினார்கள் என்று தெரியாது.

முஸ்லிம் நாடான இந்தோனேஷியாவின் அதிபர் மேகவதி சுஹனோ புத்திரி அமெரிக்க நகர்தாக்குதல் நடந்தபின் அதிபர் புஷ்ஷைச் சந்தித்திருந்தார். அவரின் சந்திப்பில் பேரம்பேசப்பட்டதா அல்லது ஏற்கனவே பேசப்பட்டதற்கு உறுதி கூறப்பட்டதா போன்ற வினாக்கள் எழத்தான் செய்யும்.

ஈரான் போன்ற நாடுகள் இப்பொழுது உலக பயங்கரவாத எதிர்ப்புக்கு இணங்கியிருகின்றன என்பது எதனைக் காட்டுகிறது?

அமெரிக்காவின் பொருளாதார அடிபணிவுக்கு அல்லது வல்லரசு ஆதிக்கத்துக் பயந்து இந் நாடுகள அணியில் சேர்ந்தனவா?

அரேபிய நாடுகளை எடுத்துக் கொண்டாலும் பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்காவிற்கு சாதகமாக இருக்கின்றன வென்றால் இன்னொரு யுத்தம் வந்தால் இஸ்லாம் உலகம் நசுக்கப்பட்டுவிடும். பொருளாதாரத்தை வளர்க்க முடியாது என்ற நிலைப்பாடு வரலாம் எனக் கருதி நிழல் நிபந்தனைக்கு உட்பட்டிருக்கின்றன வென்று சொல்லவேண்டும்,

சீனாகூட தாய்வான் பிரச்சினையில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்த வேண்டும் என்ற நிபந்தனையை முன் வைத்துள்ளது. ஜப்பான் பொருளாதரத்தில் இன்னும் அமெரிக்காவை மிஞ்ச வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அமெரிக்கா பக்கத்தில் நின்றுகள தளத்திற்கு உதவுகிறது.

தலிபானை சுற்றி வலைப் பின்னலில் நாடுகளெல்லாம் அமெரிக்காவின் அணியில் துணை நிற்கின்றனவென்றால் எல்லாநாடுகளும் நிபந்தனையுடன் சிலவற்றை எதிர் பார்த்து நிற்கின்றன வென்று சொல்ல வேண்டியிருக்கிறது. [து]

## சிறுவனின் விபரீத ஆசை வீடு தீயில் நாசம்

(மானிப்பாய்)

சிறுவனின் விபரீத ஆசையினால்,குடியிருந்த வீடு எரிந்து சாம்பரானது.

பெற்றோர் வீட்டில் இல்லாத வேளை, விளையாட்டுத்தனமாக 'பீடி' பிடித்த 5 வயதுச் சிறுவன், பீடித்துண்டை வீட்டினுள் எறிந்தபோது, அது மண்ணெண்ணெய் விளக்கில் பட்டதால் வீடு முழுவதும் தீப்பற்றியதுடன், அங்கிருந்த சொத்துக்களும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.

நாவற்குழியிலிருந்து இடம் பெயர்ந்து நவாலி வடக்கில் வசித்து வந்த பாபு என்பவரின் குடியிருப்பே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது.

அயலவரின் உதவியுடன், சிறுவனுக்கு நேரவிருந்த தீ அபாயம் தடுக்கப்பட்டது. (உ-232)

## கிறெசர் மண்ணினால் பொதுமக்கள் அவதி

(நல்லூர்)

வண்ணை-ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானப் பகுதியிலிருந்து யா/இந்துக்கல்லூரி வரையிலான கே.கே.எஸ். வீதியில் போடப்பட்டுள்ள கிறெசர் மண்ணினால், இவ்வீதியின் இருமருங்கிலும் உள்ள வீடுகள், கடைகள் புழுதி மண்டிக் காணப்படுவதாகவும், சுற்றுச்சூழல் சுகாதாரம் பாதிக்கப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் கவலையுடன் புகார் தெரிவித்துள்ளனர்.

இதனால் வாயையும், மூக்கையும், ஏன்! கண்ணையுமே மூடிக் கொண்டுதான் மக்கள் இப்பகுதியால் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [செ-103]

## உப பதவிகள் தெரிவு

(யாழ்ப்பாணம)

பலாலி ஆசிரிய கலாசாலை சைவமாணவர் மன்றத்திற்கு முதலாம் வருட மாணவர்களில் உப பதவிகளுக்குப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

உபதலைவர்:-சீ. பாலதயாகரன், உபசெயலாளர்:- வை. ஜெயபாலன், உபபொருளாளர்:- செல்வி த. மஞ்சுளாதேவி, பத்திராபதிபர்:-செல்வி சி. திவ்வியா (உ-106)

## பாலர் பாடசாலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பாற்பண்ணை வீதியில் மகாத்மாஜி சனசமூக நிலையமும் பாலர்பாடசாலையும் கடந்த சனிக்கிழமை நல்லூர் பிரதேச சபை செயலாளர்

(02ம் பக்கம் பார்க்க)

## போலிச் சான்றிதழ் தயாரித்த வவுனியா செயலக சிற்றூழியர் கைது

(வவுனியா)

வவுனியா அரச அதிகாரிகளின் கடிதத் தலைப்பையும் இலச்சினைகளையும் பயன்படுத்தி திருமணம் செய்யவில்லை என்ற போலிச் சான்றிதழ் வழங்கிய ஆசாமி நேற்று முன்தினம் வவுனியா குற்றத்தடுப்பு புலனாய்வுத்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் கடமை ஆற்றும் சிற்றூழியர் ஒருவரே வவுனியா அரச அதிபரின் ஒப்பத்தை வைத்து போலிச் சான்றிதழை வழங்கியவராவர்..

இப்போலிச் சான்றிதழைப் பெற்றவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருவரெனத் தெரிய வந்துள்ளது. இது பற்றி மேலும் தெரியவருவதாவது, வவுனியா மாவட்ட செயலகத்தை சேர்ந்த சிற்றூழியர் ஒருவர் 1500 ரூபா லஞ்சம் பெற்று வவுனியா அரச அதிபரின்கடித தலைப்பையும், இலட்சினையையும் திருடி திருமணஞ் செய்யவில்லைஎன்ற போலிசான்றிதழை வெளிநாடு செல்லவிருந்த இளம்பெண்ணுக்கு வழங்கியுள்ளார். அதனைஅந்த இளம்பெண் கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சில் சமர்ப்பித்திருந்தார். அதனை உறுதிப் படுத்த குறித்த அமைச்சு வவுனியா அரச அதிபர் கே.கணேஷுக்கு அனுப்பிவைத்த போதே போலி ஆவணச்

(08ஆம் பக்கம் பார்க்க)

அமைந்தாங் கொழுகான்
-அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்துகெடும்
-குறள்

வலம்புரி

## ஐயமற்ற தெளிவு

அமெரிக்காவின் பயங்கரவாத ஒழிப்பில் விடுதலைப்புலிகள் இலக்கல்ல என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராலயப் பேச்சாளர் ஸ்ரீபன் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் இரு நகரங்கள் மீது இடம் பெற்ற பெரும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலால், கடுப்பேறியுள்ள அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் உலகநாடுகளிலுள்ள பயங்கரவாத அமைப்புகளை ஒழித்துக்கட்டும் காலம் நெருங்கிவிட்டதெனக் கூறியிருந்தார். உலக வல்லரசான அமெரிக்காவின் இந்த அறிவிப்பை இந்தியா, இலங்கை உள்ளிட்ட பல நாடுகள்தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதில் தீவிரமாக ஈடுபட்டுள்ள்ன.

இதில் வல்லமை பொருந்திய இந்தியா ஏதோவொரு வகையில் அமெரிக்காவுடன் நெருங்கியிருந்து தனது இலக்கை அடைவதில் கண்ணும் கருத்துமாய் செயற்பட்டு வருகிறது.

ஆனால் வல்லமையில்லாத இலங்கையரசு என்ன செய்ய முடியும். அமெரிக்கா தயாரித்த பயங்கரவாதப் பட்டியலில் விடுதலைப் புலிகளையும் உள் நுழைத்து விட்டால் அப்பாடா என்று பெருமூச்சு விடலாம் எனத் திட்டம் தீட்டியது. ஆனால் அத்திட்டத்தை முறியடிக்கும் வகையில், இலங்கையில் விடுதலைப்புலிகள் நடத்தி வரும் போராட்டத்திற்கும், ஏனைய நாடுகளில் காணப்படும் பயங்கரவாதத்திற்கும் இடையில் நிறையவே வித்தியாசம் உண்டு என அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ஸ்ரீபன்தெரிவித்துள்ளார்

அதுமட்டுமன்றி அமெரிக்கா மீதான தாக்குதலின் சூத்திரதாரியெனக் கருதப்படும் ஒஸாமா பின் லேடனுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதமான தொடர்புமில்லை என்பதையும் ஸ்ரீபன் உறுதி செய்துள்ளார்.

அமெரிக்கத் தூதரகப் பேச்சாளரின்இத்தெளிந்த விளக்கம் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் அமெரிக்கா மிகவும் நிதானமாக இருப்பதைக் காட்டியுள்ளது.

இருபெரும் தாக்குதல்கள் நடந்தபோதிலும் இலங்கை இனப்பிரச்சினை சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டுமென்ற அமெரிக்க அரசின் நிலைப்பாட்டை ஈழத்தமிழ் மக்கள் நிச்சயம் பாராட்டவே செய்வர்.

# ஜீரணம் குளுக்கோஸை உருவாக்க வேண்டும்

# இன்சுலின் நீரிழிவு நோயைக் குணப்படுத்தாது

நாம் எந்த உணவை(தண்ணீர் கூட) உட்கொண்டாலும். அது ஜீரண உறுப்புக்களால் முறையாக ஜீரணிக்கப்படுகிறது. முறையானஜீரணம்என்றால் என்ன? ஒருவர் உணவு வேளையின் போது தனக்கு வேண்டாம், பசியில்லை என்று கூறுகிறார். ஆனால்உணவுபரிமாறப்படும் போது,தனக்குப்பிடித்தமான உணவுப் பொருள்கள் இருப்பின், ஒரு பிடி பிடிக்க உட்கார்ந்து விடுகிறார். இது உண்மையான பசி இல்லை. ருசிக்காக ஆசைப்பட்டு உண்ணும் உணவு முறையாக ஜீரணிக்கப்படமாட்டாது;

## மருத்துவ விளக்கம்

### பசிப்பவர் ருசிபாரார்

உண்மையிலேயே பசிக்கும் ஒருவர் இது வேண்டும், அது வேண்டும், இது ஏன் செய்யவில்லை, இதில் உப்புஇல்லை, அதில் காரம் இல்லை என்று பரிமாறப்பட்ட உணவில் குறை சொல்லிக் கொண்டிருக்க மாட்டார். இருக்கும் உணவை நன்றி மரியாதையுடன் சாப்பிடுவார். ஆக,முறையான ஜீரணத்துக்குமுன்னோடியாக இருப்பது, சாப்பிட ஏதேனும் கிடைக்காதா? என்று ஏங்கக் கூடிய உண்மையான உடல் நல பசியாகும்; ருசிக்காச் சாப்பிடும் எந்தச் சசப்பாடும் நீண்டகாலஉடல் நலக் கேட்டிற்கு வழிவகுக்கும். உணவுப் பதார்த்தங்களில் ருசியின் தன்மை கூடக் கூட, ஜீரணத்தின் திறன் குறைய ஆரம்பிக்கிறது. காரணம், எந்த உணவுப் பொருளும் வாயில் நன்றாக மென்று அரைக்கப்பட வேண்டும். அவ்வாறு அரைக்கப்படப் போதுமான அளவு உமிழ் நீர் சுரந்தாக வேண்டும். உமிழ் நீரானது இருவகைகளில் சுரக்கிறது, ஒன்று பசியின் காரணமாகச் சுரப்பது, இரண்டு ருசியின் காரணமாக சுரப்பது.

பசியின் காரணமாக உமிழ் நீர் சுரக்கும் போது, உணவின் தேவைக்குத் தகுந்தஅளவிலும், பசியின் தன்மைக்குத தகுந்த அளவிலும் சுரக்கின்றது. அவ்வளவு உமிழ் நீரும் உணவின் முழுமையான ஜீரணத்திற்காக உபயோகப் படுத்தப்படுகிறது; பசிஎப்போது இல்லையோ, அப்போது தான் உணவைத் தள்ளுவதற்கு ருசி தேவைப்படுகிறது. ருசியின் மிகுதியால் சுரக்கப்படும் உமிழ் நீர், ஜீரணத்திற்குப்பயன்படாது. ஜீரணக் கேட்டிற்கே வழிவகுக்கும்;பசிக்காகச்சுரக்கும்உமிழ் நீரும், ருசிக்காகச் சுரக்கும் உமிழ் நீரும் எவ்வாறு உடல் நலத்திற்கும், உடல் நலக் கேட்டிற்கு வழி கோலுகிறது என்பதைக் கீழ்வரும் உதாரணம் நமக்கு நன்கு விளக்கும்.

ஏழை ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரே ஒரு காய்ந்த ரொட்டித்துண்டு மட்டும் கிடைத்தாலும்போதும்அதைக் கொஞ்சம் கொஞ்சமாகநாள் முழுமைக்கும் பயன்படுத்துவார். நன்றாகப் பசியுடன் இருக்கும் ஒருவருக்கு எந்த ருசியுமே இல்லாத உணவுப் பண்டங்களை வைத்தாலும் அதுவே அவருக்கு ருசிக்கும். அந்த அளவுக்கு உணவிலிலுள்ள இயற்கையான ருசியைப் பிரித்தெடுத்து உணரக் கூடிய சக்தியைப் பெற்றிருக்கிறது. இந்த சூழ் நிலையில் சுரக்கும்அவருடையஉமிழ்நீர்;

### ஜீரணசக்தி இழப்பு

ஆனால் வெறும் ருசிக்காகவே சாப்பிட அமர்ந்திருக்கும், ஒருவருக்கு அவருடைய உமிழ் நீரானது, உணவைஜீரணிக்க எந்த வித சக்தியும் பெறாத வெற்று நீர்தான்; உணவை வாயில் வைத்ததும் ருசி நாக்கில்பட்டதும்மென்று தின்னக் கூடமாட்டார். அப்படியே விழுங்கிவிடுவார்; ஒரு கவளத்தை விழுங்கு முன்னரே அடுத்த கவளத்தை வாய்க்குள் திணிப்பார். அந்த அளவுக்கு அவருக்கு மசாலாக்களின் ருசி, நாக்கு முழுவதும் இருந்து கொண்டே இருக்க வேண்டும். இந்த விதத்தில் உமிழ்நீர் அதிகமான ருசியின் காரணமாகத் தேவையற்ற முறையில் தூண்டப்படும் பொழுது, அந்த உமிழ் நீர் நாளடைவில் ஜீரண சக்தியை இழக்கிறது. ஜீரண உறுப்புகளின் முதல் உறுப்பான வாய்ப்பகுதியிலேயே ஜீரண சக்தி இல்லாமல் இருக்கும் போது, அதனைத்தொடர்ந்து செயலாற்றக் கூடிய மற்ற ஜீரண உறுப்புகளும்நாளடைவில் தத்தம் செயல் திறனை இழக்கின்றன. இவ்வுறுப்புக்களின் ஊடே, உணவு செல்லும் போது, ஜீரணம் ஒழுங்கற்ற முறையிலேயேநடக்கின்றது. ஜீரணம் பூர்த்தியாவதும் இல்லை;

### குளுக்கோஸ்

ஜீரணிக்கப்படும் உணவானது இறுதியாகக் குளுக்கோஸாக மாற்றப்படுகிறது. இந்தக் குளுக்கோஸ்தான், உடல் ஷெல்கள் அனைத்தினாலும் உபயோகிக்கப்படுத்தப்படுகிறது. ஒவ்வொருவரிடத்திலும் உள்ள ஜீரண உறுப்புகள், அவரவர் ஜீரணஉறுப்புகளின் மூலமாக ஜீரணிக்கப்பட்டுக் குளுக்கோஷாக மாற்றப்படும் போது, அவரவர் உடல் இயற்கைக்குஏற்றவாறு தனித்தன்மை வாய்ந்ததாக மாறுகிறது. இந்த வகையில், ஜீரணத்தின்கடைசி நிலையில் வெளிப்படுத்தப்படும். விற்றமின்களும், தாதுக்களும், குளுக்கோசும் ஜீரண உறுப்புகளின் இயக்கத்திறன்மூலம் வெளிப்படுத்தப்படும் போது தான் அவையனைத்தும்குறிப்பிட்ட நபருக்குஒத்துக்கொள்ளக் கூடியதனித்தன்மையைப் பெறுகிறது.

இதைத் தவிர்த்து ஊட்டச் சத்து என்ற முறையில் விற்றமின்கள் நிறைந்தது, புரோட்டீன்கள் நிறைந்தது என்று வியாபார முறையில் தயாரிக்கப்படும், பால் பவுடர்களும் இன்னும் பிற தயாரிப்புகளும் நமக்கு இருவகைகளில் கேட்டை விளைவிக்கக் கூடியவைகளாக உள்ளன. ஒன்று ஒவ்வொருவருடைய ஜீரண சக்தியின் வாயிலாகக் கிடைக்கப் பெறும் ஊட்டச் சத்து தான், அவரவர் உடல் ஏற்றுக் கொள்ளக் கூடிய தனித் தன்மையைப் பெறும். இந்த ஊட்டச் சத்துக்கள்வெளியிலிருந்து கிடைக்கப் பெறும் போது அவை உடலால் ஏற்றுக் கொள்ளப்படப் போவதில்லை. இவ்விதம் ஊட்டச் சத்துக்கள் என்ற பெயரில்விற்கப்படும் பவுடர் தயாரிப்புகளைத் தாய்மார்கள் பலரும் ஆசையோடு குழந்தைகளுக்கு ஊட்டி வளர்ப்பதைப் பார்க்கிறோம். குழந்தைகள் புசுபுசு என்று உடல்பருமனாகின்றன. ஆனால் இவை உடல் தெம்பைக் கூட்டுவதில்லை. குழந்தைகளுக்கு உடம்பு போடுவது ஏன் எனில் அந்த ஊட்டச் சத்துக்கள் உடலால் உபயோகப் படுத்தப்படாமல் வெளியிலேயே தங்குகின்றன. இந்த உணவுப் பொருட்கள் தான், நாளடைவில் அலர்ஜியைத் தோற்றுவிக்கின்றன;

### ஊட்டச் சத்து ஒவ்வாமை

ஊட்டச் சத்துகள்அக்குழந்தையின் உடல்வாகுக்கேற்ற தனித் தன்மையைப் பெற்றிராத காரணத்தால் ஒவ்வாமை என்னும் அலர்ஜியை ஏற்படுத்துகிறது. பெரும்பாலான குழந்தைகளிடத்தே நாம் காணும் ஜுரமும், சளித் தொல்லைகளும் மலச்சிக்கலும் அடிக்கடி பேதியாதலும் ஆகிய அனைத்து உபாதைகளும், ஊட்டச் சத்துக்கள் கொடுக்கிறோம் என்று நினைத்துக் கொடுக்கப்படும் பவுடர்களின் விளைவுகளேயாகும்;

இரண்டு, இந்தஊட்டச்சத்துக்கள், விற்றமின்கள், புரதச் சத்துக்கள், அனைத்தும் ஒரு உணவுப் பொருளின் கடைசி நிலைப்பொருள்களாதலால், இவற்றைத் திரும்ப உட்கொள்ளும் போது, அவை ஜீரணிக்கப்படுவதில்லை. இன்னும் சொல்லப் போனால், ஜீரண உறுப்புக்கள் அவற்றைவேகமாகவெளியேற்ற முனைகின்றன. காரணம், அவற்றை உட்கொள்ளும் நபருடைய உடல் இயற்கை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் தனித்தன்மை அமையப் பெற்றதுதான் இவ்வாறு இரசாயன முறையில் தயாரிக்கப்பட்ட ஊட்டச்சத்துகளும், விற்றமின்களும், புரதச் சத்துகளும் உடல் இயற்கைக்கே புறம்பானதாகும். சிறுவயதில் கொடுக்கப்படும் இந்த ஊட்டப் பொருட்கள் தாம் பிற்காலத்தில் அனுபவிக்கும் பல தரப்பட்ட நோய்களுக்கும் காரணமாக அமைகிறது என்பதே ஆணித்தரமான உண்மை.

இதைப் போன்றே உடற்பயிற்சியைச் செய்து கொண்டிருக்கும் போது, களைப்பு ஏற்பட்டால், குளுக்கோஸ், விற்றமின் சீ.டி. என்று குடிக்கக் கொடுக்கிறார்கள இந்தக் குளுக்கோஸானது உடலால் ஜீரணிக்கப்படாது, உபயோகப் படுத்தப்படமாட்டாது; மாறாக, நாளடைவில் உடல் திறனைக் குன்றவைக்கும்; உடலின் பல உறுப்புக்களில் பலவீனத்தை அதிகரிக்கும்; இந்தக் குளுக்கோஸானது ஒரு உணவுப் பொருளின் கடைசி நிலைச் சக்தியானதாலும், இந்தச் சக்தியானது குறிப்பிட்ட நபருடையஜீரண சக்தியின் வாயிலாகக் கிடைக்கப் பெறாததாலும், அவர் உடலுக்குத் தீமையைத்தவிர நன்மையை ஒருசிறிதளவும் அளிக்கலாயக்கற்றது. நாளடைவில் நிச்சயமாக ஒவ்வாமை போன்ற அலர்ஜியினால் அல்லதுஅஜீரணத்தால் கஷ்டப்படுவர்.

சென்னை டாக்டர் சகோதரர்கள்
சித்திக் ஜமால் M.B.B.S. D.C.C.H. MD (Acu.)
பஸ்லூர் ரஹ்மான் M.B.B.S. M.R.S.H (Lon.)

### முறைகேடான ஜீரணம்

பிற்காலத்தில் ஜீரணமுறைகெடும் போதுஉண்ணும்உணவுப் பொருட்களும் முறைகேடாகவே ஜீரணம் அடைகின்றன. இவற்றின் வாயிலாகக் கிடைக்கப்பெறும் உணவுச் சத்துக்களும் முறைகேடாகவ உற்பத்தியாகின்றன; ஜீரணத்தின் வாயிலாகக் கிடைக்கப் பெறும் உணவுச் சத்துக்களில் முதன்மையானது குளுக்கோஸ் என்பதால் இதைபபற்றி மட்டுமே இப்போது கவனிப்போம்.

உணவு உட்கொண்டபின் ஜீரணத்தின் கடைசி நிலையில் வெளிப்படும் குளுக்கோஸ் தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். அதாவது அவருடைய உடலானதுஇயற்கையுடன் ஒத்துப் போகக் கூடிய வகையில் அமைய வேண்டும். உதாரணமாக, மூன்று பேர் ஒரே உணவுப் பொருளை உட்கொள்ளுகிறார்கள். இவர்கள் ஜீரணத்தின் வாயிலாக வெளிப்படும் குளுக்கோஸானது, ஒவ்வொருவருக்கும் முறையே அதனதன் தனித் தன்மையில்வேறுபட்டதாக இருக்கும்;

ஒருவருக்குரிய குளுக்கோஸ் மற்றவருக்கு ஆகாது. எனவே ஒவ்வொருவரும் தனக்குத் தேவையான எரிபொருளை, குளுக்கோஸை, அதாவது இயக்க சக்தியை ஜீரணத்தின் வாயிலாகத்தான் சம்பாதிக்க வேண்டும், மற்றக் குளுக்கோஸ், சர்க்கரை, சீனி போன்றவை உடல் உறுப்புக்களின் இயக்கத்தை முற்றிலுமாகப் பாழாக்கக் கூடியதாக உள்ளது. அது மட்டுமல்ல ஜீரண உறுப்புக்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கிறது. காரணம்உடல் இயற்கையானது தேவைக்கேற்ப வேலை செய்யும் திறனைக் கொண்டதாக உள்ளது. உதாரணத்திற்குஎமது உடல் இயக்க சக்தி குறைகிறது. எரிபொருள் குளுக்கோஸ்குறைவாக இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம் இந்த நிலை ஏற்படும் போது பசிக்கஆரம்பிக்கிறதுஉணவை உட்கொள்கிறோம். ஜீரணம் நடைபெறுகிறது; இறுதியில் தேவையானஎரிபொருள் குளுக்

(02ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

## எழில் வடிவம்

நினைப்பும் மறப்பும் அற நின்ற பரஞ்சோதி
தனைப்புலமா என்னறிவிற் சந்திப்ப தெந்நாளோ?

கல்லைச் செதுக்கி உயிர் ததும்பும் உருவத்தைச் சிற்பி சமைப்பது போன்று, உள்ளத்தைத் திருத்தி நான் தெய்விகம் திகழ்பவன் ஆவேனாக;

அண்டங்களையெல்லாம் உருவாக்கும் மஹா சிற்பியாக சர்வேசுவரன் இருக்கிறார். என்னை நல்லவனாக உருவாக்கும் சிற்பி நான் ஆவேனாக. உள்ளுறையும் இறைவன் துணைகொண்டு என்னை நான் ஒழுங்குபடுத்தாவிட்டால் வேறு யார்க்கு அது இயலும்?

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

# நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஜே.வி.பியின் ஆதரவுதேவையில்லை

## ஐ.தே.கட்சி எம்.பி. சேனாரத்னா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகர்அனுராபண்டார நாயக்காவிடம் நாளைசமர்ப்பிக்கப்படுமென ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜிதசேனாரத்னா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைபாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு மக்கள்விடுதலைமுன்னணி (ஜே;வி;பி)யின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்சவின் ஆலோசனை எமக்குத் தேவையில்லை;

பாராளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்படும்போது ஜே.வி.பியினர்அதற்கு ஆதரவாக வாக்களித்தாலென்ன எதிராக வாக்களித்தாலென்ன பிரேரணை வெற்றிபெறுவது மட்டும் நிச்சயமாகிவிட்டதென அவர்மேலும் தெரிவித்துள்ளார்; (ந-5)

# ஆசிரியர் தினத்தை ஒக். 5இல் அனுஷ்டிக்குக

## மகாசிவம் கோரிக்கை

[கொழும்பு]

உலக ஆசிரியர் தினக் கொண்டாட்டங்களை எதிர்வரும் ஒக்டோபர் 5ந் திகதி நடத்துமாறு தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலர் மகாசிவம் கேட்டுள்ளார்;

உலக ஆசிரியர் தினம் ஒக்டோபர் 6ம் திகதி கொண்டாடப் பட்டு வந்த போதிலும், இம்முறை ஒக்டோபர் 5ம் திகதி ஆசிரியர் தினத்தைக் அனுஷ்டிக்குமாறுஅவர் கோரியுள்ளார்;

இதேவேளை அன்றைய தினம் வெப்பதளம் ஒன்றை அமைப்பதற்கான நிதியம் ஒன்றை ஆரம்பித்து வைக்கவுள்ளதாகவும் மகாசிவம் லேமம் தெரிவித்தார்; (ந)

# வளைகுடாவில் தரித்து நிற்கும் அமெ.படைகள்வெளியேறத்தவறின் பாரிய விளைவைச் சந்திக்கும்

## ஆப்கான் இஸ்லாமிய தலைவர் எச்சரிக்கை

(காபூல்)

அமெரிக்காவின் உளவு விமானம் காணாமற்போனதைப் போன்றே ஒசாமா பின்லேடனும் காணாமற் போய்விட்டதாக தலிபான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை முதல் அவரைத்தேடிவருகின்றோம்; ஆனால் அவரைகாணவில்லை இவ்வாறே அமெரிக்காவும் எமது நாட்டை உளவுபார்ப்பதற்கு அனுப்பிய ஆளற்ற வேவுவிமானமும் காணாமல் போய்விட்டதென்று அவர்கள் தெரிவித்துள்ளனர்

இதேவேளை அமெரிக்கப் படைகள் வளைகுடாப் பகுதியில் இருந்து வெளியேறாவிட்டால் பாரிய அழிவுகளைச் சந்திக்கவேண்டிவருமெனஆப்கான் இஸ்லாமிய மதத் தலைவர் முல்லா மொகமட் ஓமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்;

அமெரிக்கா தன்னைத்தவறாக வழிநடத்த விடக்கூடாது என்னையோ அல்லது ஒஸாமா பின்லேடனையோ அழிப்பதன் மூலம்இந்தநெருக்கடிக்குத் தீர்வுகாண முடியாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்;

பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென அமெரிக்கா விரும்பினால் வளைகுடா மற்றும் பலஸ்தீனப்பகுதியில் இருந்து அமெரிக்கப் படைகள் முற்றாக வெளியேற வேண்டுமென அவர் நிபந்தனை விதித்துள்ளார்; (ந5)

### வீட்டைப்...

படியும் வீட்டில் உள்ள பொருட்களை பட்டியலிட்டு பலியானவர்களின் நெருங்கிய உறவினர்களிடம் கையளிக்குமாறும் நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்;

சம்பவம் நடை பெற்ற இடத்தில் ஒரு தாலிக் கொடி (மூன்றுகாசுகளுடன்) 1சோடி காப்பு, இரண்டு சங்கிலி, 4மோதிரங்கள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன;

மீட்கப்பட்டுள்ளநகைகளை பலியானவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கும் படியும் நீதவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்;

இந் நகைகளையும், வீட்டு உடைமைகளையும் பலியானவர்களின் நெருங்கிய உறவினரான தம்பையா வேலும்மயிலும் என்பவரிடம் அப்பகுதி கிராம சேவையாளர் எஸ். முத்துக்குமாரசாமி ஒப்படைத்துள்ளார்; (வ)

### ஆறுபேரின்..

இவ்விடத்தில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களில் இரண்டு சுமார் 75அடி தூரத்திலும் இரண்டு சடலங்கள் சுமார்40அடி தூரத்திலும் கிடக்கக்காணப்பட்டது. அடுத்த இரு சடலங்களும் அடையாளம் காணமுடியாத அளவுக்கு சிதறிக் காணப்பட்டதுடன் சம்பவ இடத்தில் பெரும்பாலும் சதைத்துண்டங்களே காணப்பட்டன;

அடையாளம் காண முடியாத நிலையில் காணப்பட்ட இரு சடலங்களும் அவற்றில் இருந்த உடைகளைக் கொண்டே உறவினர் சடலங்களை அடையாளம் காட்டினர்; (வ)

# ஐ.தே.க. - தமிழ்கட்சிகள் உறவில் விரிசல் நிலை !

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 17 வது திருத்த சட்ட மூலத்திற்கு ஐ தே. கட்சி ஆதரவாக வாக்களித்துள்ள நிலையில் தமிழ்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

நேற்று பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் அமைப்பின் 17 வது திருத்தச் சட்டத்திருத்த மூலத்திற்குஐக்கியதேசியக்கட்சியில் உள்ள தமிழ், முஸ்லிம் பாராளுமன்றஉறுப்பினர்களும் அரசுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது;

இந்நிலையில் அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு தமிழ்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவை வழங்க சில நிபந்தனைகள் விதித்து அது வெற்றி அளிக்காத பட்சத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக வாக்களிப்பது சம்பந்தமாக பின்னர் தீர்மானிக்கவிருப்பதாக தெரிவித்துள்ளனர்; [வ]

### முல்லைக்...

(முத்துலிங்கம் யசோதா உடையார்கட்டு)

கடற்புலி மேஜர் திருமலை [உருத்திரசிங்கம் விந்தன் யாழ்ப்பாணம்]

## மின்சாரம்தாக்கி இரு பெண்கள் பலி

(புத்தளம்)

புத்தளம்ஆனைமடுவப் பகுதியில் மின்சாரம் தாக்கியதில் இருபெண்கள் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்

தோட்டத்து வேலியிக்கு ப்பாய்ச்சப்பட்ட மின்சார இணைப்பில் சிக்கியே இவர்கள் இருவரும்உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது; (ந-5)

## எண்ணெய்க் கப்பல் கடற்படை சோதனை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் கடற்படையினருககுமிடையில் முல்லைத்தீவுக் கடற்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடற்சமரை அடுத்து கடற்படையினரால் எண்ணெய் தாங்கிக்கப்பல் ஒன்று கைப்பற்றப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது;

மும்பாயில் பதிவு செய்யப்பட்ட எம்.றிரிச் என்ற இந்தக் கப்பலை திருகோணமலைத் துறைமுகத்திற்குக் கொண்டு சென்ற கடற்படையினர்கப்பலைத்துருவித்துருவிசோதனை செய்தபின்னர் நேற்று முந்தினமிரவு எட்டுமணியளவில் கப்பலை விடுவித்தனர் (ந-5)

### ஒரே குடும்பத்தைச்

தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளனர்;

சம்பவத்தில் ஆட்டோ சரதி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்;

மிகஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் தற்போது ஆபத்து நிலையை தாண்டிவிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

ஆறு உயிர்களைப் பலிகொண்ட இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

#### கொழும்பு செல்ல ஆட்டோவில் புறப்பட்டனர்

இருபாலைகிழக்கு ஒழுங்கை கண்டிலேனில் உள்ள தமது வீட்டில்இருந்து விமானம் மூலம் கொழும்பு செல்வதற்கான பயணஏற்பாடுகளுடன் யாழ்ப்பாணம் நோக்கி ஆட்டோவில் புறப்பட்டபோது ஆட்டோஒழுங்கைப் பாதை ஊடாகசென்ற இருநிமிடத்தில் பாரியசத்தத்துடன் வெடித்த அமுக்கவெடியில் ஆட்டோ சிக்கிச்சிதறியது.

மருமகன் கமலரட்ணம் மகள்பிருந்தா பேர்த்தி பிரியந்தினி ஆகிய மூவரையும் கொழும்புஅனுப்பிவைப்பதற்காக பிருந்தாவின் தந்தை இராசேந்திரம் தாய் தெய்வநாயகி சகோதரி நிருபா ஆகியமூவரும் ஆட்டோவில் சேர்ந்து புறப்பட்டனர்;

உயிரிழந்தவர்களில் பிரியந்தினி கடந்தமாதம்23ம்திகதி தனது ஒருவயதுபிறந்ததினத்தைக் கொண்டாடியிருந்தார் நிருபாகோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிமாணவியாவர் இவருடைய பூப்புனிதநீராட்டு விழா அண்மையில் மிகவிமர்சையாகக் கொண்டாடப்பட்டது;

#### இராணுவ அரணை ஊடறுத்த ஒற்றையடிப்பாதை

பிரஸ்தாப குடும்பத்தினரின் வீட்டிற்கு அண்மையில் இராணுவப் பாதுகாப்பு அரண் நீண்டு செல்கிறது.

இப்பாதுகாப்பு அரணை ஊடறுத்து இப்பகுதிமக்கள் போக்குவரத்துக்காக சிறிய ஒற்றையடிப்பாதை அமைத்து கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தி வந்துள்ளனர்;

இப்பாதை ஊடாக வாகனங்களும் சென்று வந்துள்ளன;

இவ்வாறு பயன்படுத்தப்பட்ட பாதையிலேயே பிரஸ்தாப ஆட்டோவும் சென்ற போது அமுக்கவெடியில் சிக்கியுள்ளது;

இருபாலை கிழக்கில்உள்ள மக்கள் இருபாலைச் சந்திமற்றும் பருத்தித்துறை பிரதான வீதியைச் சென்று அடைவதற்கு இருபாலை கிழக்கு வீதி மட்டும் பயன்பாட்டில் உள்ளது.ஏனைய வீதிகளும் ஒழுங்கைகளும் இராணுவப் பாதுகாப்பு அரண் ஊடறுத்துசெல்வதால் மூடப்பட்டுள்ளது;

இவ் இராணுவப் பாதுகாப்பு அரண்பகுதியில்கடந்த காலத்தில் பலர் உயிரிழந்துள்ளமை, கால்களை இழந்துள்ளமை, கண்களை இழந்துள்ளமையும், கால்நடைகள் பல இறந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்;

#### யாழ் நீதிபதி நேரில் பார்வையிட்டார்

சம்பவம் நடந்த இடத்தை யாழ் மாவட்ட நீதிபதி இ; த விக்கினராஜா கோப்பாய் பொலிசார்மற்றும் இராணுவ அதிகாரிகள் அப்பகுதி கிராம உத்தியோகஸ்தர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

நீதிபதியின் உத்தரவுக்கு அமைய சிதறிய சடலங்களின் பாகங்கள் யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு மரண விசாரணையின்பின் நேற்று மாலையே சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது;

#### இருபாலை எங்ஙனமும்சோகமயம்

ஒரே நேரத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் உயிரிழந்துள்ள இச் சம்பவம் அப் பகுதியெங்கும் பெரும் பரபரப்பானதுடன் பெரும் சோகத்தையும் வேதனையையும் ஏற்படுத்தி நெஞ்சை உலுக்குவதாக அமைந்துவிட்டது.

இதேவேளை மேற்படி சம்பவம் நடைபெற்ற இடத்துக்குமிக அண்மையில்அடுத்த ஒழுங்கையில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர்லான் மாஸ்ரறில் விறகு ஏற்றிக் கொண்டிருந்த போதுஅமுக்கவெடி வெடித்ததில் லான் மாஸ்ரர் சுக்குநூறாகவெடித்துச் சிதறியதுடன் அதன் சாரதி உடல் சிதறிப்பலியானமையும் இங்கு குறிப்பிடத்தக்கது;

(வ-இ-10-104-225)

### 17 வது திருத் ---

கட்சிகள் ஒன்றிணைந்துநிறைவேற்றியிருப்பது எதிர்காலத்தில் சிறுபான்மைத் தமிழ்க் கட்சிகளின் நிலைகேள்விக்குரியதொன்றாகஅமையப்போவதென அரசியல் ஆய்வாளர்கள்கருத்து வெளியிட்டுள்ளனர் [வ



காலத்தால் அழியாத கற்பனைக்கு எட்டாத தங்க வைர நகைகளுக்கு

நிருத்திகா ஜுவலர்ஸ்

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P 021 - 2694

(ஐ 2367)

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;